ISSN: 2582–5518




புதுகை
வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ டிசம்பர். 24, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 80 ❖ ரூ.10

## கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்பு

# அரசு ஏற்பாடு

## தென் மாவட்டங்களில் கல்லூரிச் சான்றிதழ்களை இழந்தவர்கள் கட்டணமின்றி நகல்களைப் பெறலாம்: உயர் கல்வித் துறை

சென்னை , டிச. 24–

கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்பினால் கல்லூரிச் சான்றிதழ்களை இழந்த மாணவ, மாணவிகளுக்கு கட்டணமின்றி அவற்றின் நகல்களை வழங்க தமிழக உயர் கல்வித் துறை முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக சில முக்கிய விவரங்களை தெரிவித்துள்ளது.



தமிழக உயர் கல்வித் துறை இது குறித்து வெளியிட்ட செய்திக் குறிப்பில், "தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளில் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. ஏற்கெனவே, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்பினால் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகச் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகள் தங்கள் சான்றிதழ்களின் நகல்களை கட்டணமின்றி பெறுவதற்கு ஏதுவாக www.mycertificates.in என்ற இணையதளம் உயர் கல்வி துறையால் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்களும்தாங்கள் இழந்த சான்றிதழ்களின் நகல்களை பெற அச்சான்றிதழ்கள் பற்றிய விவரங்களை மேற்கண்ட இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம்.

மாணவ, மாணவிகள் மேற்கண்ட இணையதளம் வாயிலாக சான்றிதழ்களின் விபரங்களை பதிவு செய்தபின் அவர்களது மின்னஞ்சலுக்கு ஒப்புகை (Acknowledgement) அனுப்பப்படும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்டு, மாணவ, மாணவியர்களுக்கு, அவர்கள், எந்த மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தார்களோ, அதேமாவட்டத்திலேயே, அவர்களுக்கு வழங்கப்படும். அதாவது, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்குதிருநெல்வேலி மாவட்டத்திலேயே வழங்கப்படும். மேலும், இணையதளத்தில் பதிவு செய்வது குறித்த சந்தேகங்களுக்கு தெளிவு பெற, தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் செயல்படும் கட்டணமில்லா அழைப்பு மையத்தை 1800-425-0110 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்" எனத் தெரிவித்துள்ளது.

---

### புதுகை வரலாறு நாளிதழின்

## 2024 ஆம் ஆண்டு மாதாந்திர காலண்டரை தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வெளியிட்டார்



திருமயம் , டிச. 24–

திருமயம் அருகே நடந்த கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவில் பங்கேற்ற சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி புதுகை வரலாறு நாளிதழின் 2024 ஆம் ஆண்டு மாதாந்திர காலண்டரை வெளியிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற, சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி தலைமையில் நடைபெற்றது. சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் மற்றும் மகளிர் திட்டத்தின் சார்பில் இலவச திறன் பயிற்சிக்கான சான்றிதழ்களையும் வழங்கினார். மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பிரேமலதா வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில், புதுகை வரலாறு நாளிதழின் 2024 ஆம் ஆண்டு மாதாந்திர காலண்டரை புதுகை வரலாறு ஆசிரியர் சு.சிவசக்திவேல், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் ஆகியோர் முன்னிலையில் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வெளியிட முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், பெற்றுக்கொண்டார். அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொது) மோ.மணிகண்டன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ) பெ.வேல்முருகன், உதவி திட்ட அலுவலர் தில்லைமணி, செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மேலாண்மை இயக்குநர் ஆர்.வயிரவன், முதன்மை செயல் அதிகாரி ஏ.வி.எம்.எஸ். கார்த்திக், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், வட்டாட்சியர் புவியரசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வருடம் தோறும் புதுகை வரலாறு நாளிதழின் மாதாந்திர காலண்டர் கூடுதல் விலையின்றி டிசம்பர் 25ஆம்தேதி நாளிதழுடன் வெளிவருகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டும் டிசம்பர் 25ஆம் தேதி கிறிஸ்துமஸ் நாளான திங்கள்கிழமை புதுகை வரலாறு நாளிதழுடன் வெளி வருகின்றது. முன்பதிவு மற்றும் தொடர்புக்கு 750 2051 351 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புக்கிங் செய்து கொள்ளலாம் அல்லது கூடுதல் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## சங்கரன்கோவில் புத்தகத் திருவிழாவை முன்னிட்டு புகைப்பட கலைஞர்கள் தனித்திறன் போட்டி

சங்கரன்கோவில், டிச. 24–

சங்கரன்கோவிலில் தமிழக அரசின் புத்தக திருவிழா சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் இன்று தொடங்கி ஜனவரி 2ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த திருவிழாவை ஊக்குவிக்கும் வகையில் புகைப்பட கலைஞர்கள் தனித்திறன் போட்டி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து திமுக வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ விடுத்துள்ள அறிக்கையில். புத்தகத்திருவிழாவை முன்னிட்டு புகைப்பட கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் புகைப்பட கலைஞர்கள் தனித்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் பரிசாக ரூபாய் 10,000, 2ம் பரிசாக ரூபாய் 5000, 3ம் பரிசாக ரூபாய் 3000 வழங்கப்படும். இந்த போட்டிகளில் பங்குபெறும் புகைப்பட கலைஞர்கள் சங்கரன்கோவில் சுற்றுவட்டாரத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தை தர வேண்டும். புகைப்படத்தை கருப்பு வெள்ளை அல்லது வண்ண படமாக தரலாம். புகைப்படத்தின் ப்ரேம் அளவு குறைந்தபட்சம் 12x18 என்ற அளவில் இருக்க வேண்டும்.

அவ்வாறு எடுக்கப்பட்ட புகைப்படங்களை நாளைக்குள் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். இதில் ஒரு புகைப்பட கலைஞர் 2 படங்களை அளிக்கலாம். அதில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த படங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு 9080404049 என்ற அலைபேசி நம்பரை தொடர்பு கொள்ளலாம் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## எம்.ஆர். பொறியியல் கல்லூரியில் கணித மேதை ராமனுஜம் பிறந்த நாள் கருத்தரங்கம்

அரியலூர் : டிச. 24. எம். ஆர். பொறியியல் கல்லூரியில், கணித மேதை ராமானுஜம் பிறந்தநாள் விழா கருத்தரங்கம் நடைபெற்றது.



அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள தத்தனூர் மீனாட்சி இராமசாமி பொறியியல் கல்லூரியில், அறிவியல் மற்றும் மனிதவியல் துறை சார்பாக கணித மேதை இராமனுஜம் பிறந்த நாளை முன்னிட்டு, தேசிய கணித தினம் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ந.மதியழகன் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக அண்ணா பல்கலைகழக பொறியியல் கல்லூரியின் கணிதவியல் பேராசிரியர் இராஜகுமார் கணித பயன்பாடுகள் பற்றி உரையாற்றினார். பொறியியல் பாடத்தில் அணிகல் தாக்கம் பற்றி அறிமுகபடுத்தியதோடு, எவ்வாறு பயன்படுகிறோம் என்பது பற்றியும் விளக்கி கூறினார்.

எம்.ஆர். கல்வி குழுமத்தின் தாளாளர் எம்.ஆர்.இரகுநாதன், மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் கணிதத்தின் தொடக்கம் மற்றும் அது மனிதர்களிடையே செலுத்திய தாக்கம் பற்றியும், கணிதமேதை ராமனுஜம் வாழ்க்கை பற்றியும், சாதனை பற்றியும் குறிப்பிட்டார். கல்லூரியின் இயக்குனர் தியாகராஜன் மற்றும் முனைவர். இரா. இராஜமாணிக்கம் ஆகியோர் கணிதம் பற்றி உரையாற்றினர்.

நிகழ்வில் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் முனைவர் செந்தில்குமரன், துணைமுதல்வர் ஹரிவசந்த் மற்றும் மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர். நிகழ்வின் தொடர்ச்சியாக கலைநிகழ்ச்சி, ஓவிய, பேச்சுபோட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியாக வீரவேல் அவர்கள் நன்றியுரை தெரிவித்தார்.

## கடையநல்லூரில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடக்கம்

கடையநல்லூர் : டிச. 24, தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கடையநல்லூர் நகராட்சி பகுதியான 31- வது வார்டு நாகாத்தம்மன் திருமண மண்டபத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை, திமுக நகர செயலாளர் எஸ்.அப்பாஸ் தொடங்கி வைத்தார்.




நிகழ்ச்சியில் மின் இணைப்பு, மின் கட்டண மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம், மற்றும் மின் கம்பங்கள் மாற்றம், பட்டா மாற்றுதல், பட்டா உட்பிரிவு நில அளவீடு, வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், வருமான வரி சான்றிதழ், இருப்பிடச் சான்று, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை, மாற்றுத்திறனாளிக்கான உதவித்தொகை, மூன்றாம் பாலின உதவித்தொகை, பிறப்புச் சான்று, இறப்புச் சான்று போன்றவைகள் பொது மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சேர்மன், மூப்பன் ஹபீபூர் ரஹ்மான், நகர் மன்றத் துணைத் தலைவர் ராசையா, நகராட்சி எஸ்.ஓ, மின்சார வாரிய துறை எ.இ சின்னத்துரை, காவல்துறை துணை ஆய்வாளர் கருப்பசாமி பாண்டியன், காளிமுத்து, தனலட்சுமி, நகர்மன்ற உறுப்பினர் மாரி, அவைத்தலைவர் பெட்டி முருகையா ஆகியோர் கலந்து கொண்டனர்.




## கறம்பக்குடி அருகே கோவிலை உடைத்து நகை திருட்டு

கறம்பக்குடி : டிச. 24, புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே இலைகனிவிடுதி கிராமத்தில் ஆதி சக்தி மாரியம்மன், செங்கமேட்டு காளியம்மன் கோவில் உள்ளது.

அக்கோவில் இலைகனிவிடுதி, மஞ்சுவிடுதி, கெண்டையம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள குறிப்பிட்ட சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவிலாகும். கோவிலில் திருமணஞ்சேரியை சேர்ந்த நடராஜன் என்பவர் பூசாரியாக இருந்து வருகிறார். இவர் மார்கழி மாதத்திற்காக காலை மற்றும் மாலை நேரங்களில் கோவிலில் சாமி பாடல்கள் போடுவது வழக்கம். நேற்று முன்தினம் மாலை கோவில் பூசாரி மைக் செட்டை நிறுத்திவிட்டு வீட்டிற்கு சென்றுள்ளார். மீண்டும் நேற்று காலை சாமி பாடல்கள் போடுவதற்காக கோவிலுக்கு வந்து பார்த்த போது ஆதி சக்தி மாரியம்மன் கோவில் இருந்த



இரும்புகேட்டில்போடப்பட்டிருந்த இரண்டு பூட்டுகளையும் உடைத்து சாமியின் கழுத்து மற்றும் கையில் அணிவித்து இருந்த 29 கிராம் தங்க நகைகள் மற்றும்கோவிலில் இருந்த சிசிடிவி கேமரா மற்றும் பதிவு செய்யும் கருவி மர்மநபர்கள் திருடி சென்றுள்ளதாக தெரியவந்தது. இது குறித்து கறம்பக்குடி உதவி ஆய்வாளர் பத்மபிரியா சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்து கோவிலை உடைத்து நகையை திருடிசென்ற மர்ம நபர்களை தேடிவருகின்றனர்.



புதுவை அரசு ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழு காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு மாதம் இரண்டு சனிக்கிழமைகளில் வருகை புரிந்து காரைக்கால் வாழ் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வரும் நிலையில் நேற்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நாளமில்லா சுரப்பிகளில் ஏற்படும் பிரச்சனைகள் சர்க்கரை மற்றும் தைராய்டு (Endocrinology) சம்பந்தமாக சிறப்பு மருத்துவர்கள் குழு வருகை புரிந்து சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

## ஜெயங்கொண்டம் கடைவீதியில் பொது கழிப்பறை வசதி ஏற்படுத்த பாமக கோரிக்கை

அரியலூர் : டிச. 23–

ஜெயங்கொண்டம் கடைவீதியில் பொது கழிப்பறை வசதி ஏற்படுத்த வேண்டும் என பாமக சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இதுபற்றி பாட்டாளி மக்கள் கட்சியின் ஜெயங்கொண்டம் நகர செயலாளர் பரசுராமன் வெளியிட்ட செய்தி குறிப்பு:

கிராமங்களில் கூட திறந்த வெளியில் மலம், சிறுநீர் கழித்தல் குறைந்ததுள்ளது. காரணம் பொது கழிப்பறை மற்றும் வீடுகளுக்கு கழிப்பறை கட்டநிதியுதவி அரசு அளிக்கிறது. அந்த திட்டம் முறையாக செயல்படுத்த படுகிறது. ஆனால் ஜெயங்கொண்டம் நகராட்சியில் அந்த திட்டம் செயல் படுத்தப்படவில்லை. இங்கு சொத்து வரி, குடிநீர் வரி, இதர வரி இனங்களை பன்மடங்கு உயர்த்துவது. அதன் பிறகு வீட்டுக்கு வீடு சென்று வரிவசூல் செய்வது. 90% வரிவசூல், 95% வரி வசூல், என பெருமையுடன் விருது வாங்குவது. வசூல் செய்த வரிப்பணத்தை பொதுமக்களுக்கு பலனில்லாத திட்டங்களுக்கு செலவழிப்பது. இது போன்ற பணிகள் தான் நடைபெறுகிறது. விண்ணப்பித்த ஓரே நாளில் வீட்டுமனை அப்ரூவல் கிடைக்கும். காரணம் அனைவருக்கும் தெரியும்.

எனவே சுற்றுவட்டார பகுதியிலிருந்து ஜெயங்கொண்டம் நகருக்கு வரும் பொதுமக்களின் அடிப்படை தேவையை கருதி, கடைவீதி பகுதியில் பொது கழிப்பறை வசதி ஏற்படுத்தி தர ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## ஜம்மு காஷ்மீரில் தொடரும் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டை : பூஞ்ச், ரஜவுரியில் இணைய சேவை ரத்து

ஸ்ரீநகர் : டிச. 24, ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் இரு ராணுவ வாகனங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 5 வீரர்கள் உயிரிழந்த நிலையில், அங்கு ராணுவம் தீவிர தேடுதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பூஞ்ச், ரஜவுரி மாவட்டத்தில் இணைய சேவை தடை செய்யப்பட்டுள்ளது.

ராணுவத்தினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மூன்று நபர்கள் மர்மமான முறையில் இறந்ததாகக் கூறப்படும் நிலையில், இந்த இரண்டு எல்லையோர மாவட்டங்களில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த சந்தேக நபர்கள் சித்திரவதை செய்யப்படும் வீடியோ பரப்பப்பட்டு மக்களிடம் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. களநிலவரம் குறித்து ராணுவம் மற்றும் அரசு அதிகாரிகள் தகவல் எதுவும் தெரிவிக்காத நிலையில், வதந்திகள் பரவுவதைத் தடுக்கவும், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாமல் தடுக்கவும் பூஞ்ச் மற்றும் ரஜவுரி மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இணைய சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

மூத்த ராணுவ, காவல்துறை, அரசு அதிகாரிகள் சூழ்நிலையை கண்காணித்து வருகின்றனர். மாவட்டங்களில் பதற்றமான இடங்களில் அமைதியை நிலைநாட்டும் வகையில், அங்கு போலீஸ் மற்றும் துணை ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக ஜம்மு காஷ்மீரின் ரஜவுரி மாவட்டம் தேரா கி கலி பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் கடந்த புதன்கிழமை பாதுகாப்பு படையினர் அங்கு தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ள நிலையில் அங்கு தீவிரவாதிகளுக்கும் ராணுவத்தினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. மோதல் தொடர்ந்துவந்த நிலையில் அவர்களுக்கு உதவுவதற்காக வியாழக்கிழமை மாலையில் ஒரு லாரி மற்றும் ஒரு ஜீப்பில் கூடுதல் வீரர்கள் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் ரஜவுரி எல்லையை ஒட்டிய பூஞ்ச் மாவட்டத்தின் தாத்யார் மோர் என்ற இடத்தில் அந்த வாகனங்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 5 ராணுவ வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 2 வீரர்கள் காயம் அடைந்தனர். தாக்குதலைத் தொடர்ந்து தீவிரவாதிகள் இரண்டுவீரர்களின் உடல்களை சிதைத்தனர், அவர்களின் ஆயுதங்களை எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து அப்பகுதிக்கு கூடுதல் படையினர் அனுப்பி வைக்கப்பட்டு தீவிரவாதிகளைத் தேடும் பணி நடைபெறுகிறது.

இந்தநிலையில் இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக மூன்று பேரை ராணுவத்தினர் அழைத்துச் சென்ற நிலையில் அவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மர்மமான முறையில் இறந்தனர். இறந்தவர்களின் உடல்கள் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்

## சோழன் உலக சாதனை படைத்த 6 வயது சிறுவன்

சிவகங்கை : டிச. 24, சிவகங்கையைச் சேர்ந்த மோகன்ராஜ் மாரீஸ்வரி தம்பதியரின் மகன் தேவசுகன் என்ற 6 வயதும் 11 மாதங்களும் நிரம்பிய மாணவன் 900 கிலோ எடையுள்ள காரை 200 மீட்டர் தூரம் இழுத்து சோழன் உலக சாதனை படைத்தார்.



மதுரை வல்லபா வித்தியாலயா சிபிஎஸ்இ பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சிவகங்கை அரண்மனையின் இளைய மன்னர் மகேஷ்துரை, தி-கிராண்ட் நட்சத்திர விடுதியின் உரிமையாளரும், விழித்தெழு கல்வி அறக்கட்டளையின் நிறுவனருமான முனைவர் தினேஷ்குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வல்லபா பள்ளியின் தாளாளர் அருண் வல்லப்பன் முன்னிலை வகித்தார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்களாக மருத்துவர் ஆர்த்தி, மருத்துவர் பாலாஜி, தென் மண்டலத் தலைவர் முனைவர் சுந்தர் மற்றும் மருத்துவர் கஜேந்திரன் உலக சாதனை நிகழ்வை கண்காணித்து உறுதி செய்தனர். சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நிறுவனர் முனைவர் நீலமேகம் நிமலன் சிறப்புரையாற்றினார். சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் தலைமைச் செயற்குழுவின் பொதுச் செயலாளர் ஆர்த்திகா நிமலன் நிகழ்வை ஒருங்கிணைத்து நடத்தினார். சோழன் உலக சாதனை படைத்த சிறுவன் தேவசுகனுக்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், நினைவுக் கேடயம், பதக்கம் மற்றும் அடையாள அட்டை போன்றவை வழங்கப்பட்டன. சிறுவனை பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் வாழ்த்திப் பாராட்டினார்கள்.



காரைக்காலில் அமைந்துள்ள விநாயகா மிஷன் மருத்துவ கல்லூரி சார்பாக திருநள்ளார் ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் ஆலயத்தில் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் வரும் பக்தர்களுக்கு இலவச மருத்துவ முகாம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்பொழுது சனி பெயர்ச்சி விழா நடைபெற்று வரும் நிலையில் இந்த வாரத்திற்கான மருத்துவ முகாம் நேற்று காலை 8.00 மணியளவில் துவங்கியது மாலை 6.00 மணி வரையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து மருத்துவர்கள் உடலுக்குடன் சிகிச்சைகள் வழங்கினார்கள். மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர், குணசேகரன் மற்றும் ஒருங்கிணைப்பாளர் தலைமையில் சவுரிராஜன் ஆகியோர் கொண்ட குழு நேற்று ஆலயத்தில் மரியாதை நிமித்தமாக காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கனை சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

## இலஞ்சி பாரத் வித்யா மந்திர் சி.பி.எஸ்.இ. மேல்நிலைப் பள்ளியில் 10–வது ஆண்டு விழா

தென்காசி : டிச. 24, தென்காசி மாவட்டம், இலஞ்சி பாரத் வித்யா மந்திர் சி.பி.எஸ்.இ மேல்நிலைப் பள்ளியில் 10-வது ஆண்டு விழா கொண்டாட்டம் மிகச் சிறப்பாகவும், கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டது.



பாரத் கல்வி குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், நிர்வாக இயக்குநர்கள் ராதா பிரியா மற்றும் ஜே.ஜா.விக்னேஷ்வர், கல்வி ஆலோசகர் உஷாரமேஷ் முதல்வர் வனிதா, துணை முதல்வர் கிஃப்ட் சன் கிருபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர் மருத்துவர் உட்சுரப்பியல் நிபுணர் அருண் விஷ்வநாத் மற்றும் விஜய் தொலைக்காட்சியின் கலக்கப்போவது யாரு நட்சத்திரங்கள் பாலா மற்றும் வினோத் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். விழாவானது இறைவணக்கத்துடன் துவங்கப்பட்டது. மாணவிகள் நேகா, இவானா மற்றும் முகிழ்யாழினி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். மாணவி அஃப்ரார் அகமது வரவேற்புரையாற்றினார்.

பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் மற்றும் செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன் சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர். முதல்வர் வனிதா ஆண்டறிக்கை வாசித்தார். கடந்த ஆண்டில் பத்தாம் வகுப்பு சி.பி.எஸ்.இ. பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற அனுபாரதி, இரண்டாமிடம் பெற்ற பிரியா மற்றும் தர்ஷினி மதுரம், மூன்றாம் இடம் பெற்ற பினுஷா பாத்திமா மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதலிடம் பெற்ற ஸ்ரீமன் பிரபு, இரண்டாமிடம் பெற்ற ஜீவிகா, மூன்றாம் இடம் பெற்ற ஜெயராம், பத்தாம் வகுப்பு சி.பி.எஸ்.இ பொதுத்தேர்வில் கணிதம், தமிழ், சமூக அறிவியல் பாடத்தில் முழுமதிப்பெண் பெற்ற அனுபாரதி, பிரியா, பினுஷா பாத்திமா, ஸ்ரீநிதி, பொன்செல்வ ஜெயந்த் ஆகியோருக்கு சிறப்பு விருந்தினர் கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார். முதல்வர் வனிதா, துணை முதல்வர் கிஃப்ட் சன் கிருபாகரன், பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொறுப்பாசிரியர்கள் மகாலட்சுமி மற்றும் காவைகனேஷ் ஆகியோருக்கு பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் மற்றும் செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன் பரிசு வழங்கி பாராட்டினர்.

பத்தாம் வகுப்பு சி.பி. எஸ்.இ. பொதுத்தேர்வில் தமிழ், கணிதம், சமூக அறிவியல் பாடத்தில் முழு மதிப்பெண் பெற உதவிசெய்த ஆசிரியர்களுக்கு ஸ்டால் வார்ட் விருது, ரொக்கப்பரிசும் வழங்கிப் பாராட்டினர். இதுமட்டுமின்றி சிறந்த வகுப்பாசிரியர், சிறந்த பொறுப்பாசிரியர், உற்சாகமான சிறந்த ஆசிரியர், அன்பான ஆசிரியர் போன்ற விருதுகளை வழங்கி கௌரவித்தனர். மாணவர்களுக்கு சிறந்த குழந்தை நட்சத்திர விருது, ஆல்ரவுண்டர் விருது, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறந்த பேச்சாளர் , சிறந்த பெற்றோர், சிறந்த புதுமையாளர், வித்யா ஆனந்த் நினைவு பரிசு, சிறந்த நூலகப் பயனாளர் விருது உள்ளிட்ட பல விருதுகளை வழங்கி கௌரவித்தனர். பள்ளியில் பணியாற்றி பத்து ஆண்டுகள் நிறைவு பெற்ற ஆசிரியர் மற்றும் மற்ற பணியாளர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தனர்.

கடந்த கல்வியாண்டில் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை உள்ள கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து. மங்கல இசை, மழலையர் வகுப்பு மற்றும் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களின் நடனம், தமிழ் மற்றும் ஆங்கில நாடகம் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விஜய் தொலைக்காட்சியின் கலக்கப்போவது யாரு நட்சத்திரங்கள் பாலா மற்றும் வினோத் இருவரும் நகைச்சுவையால் பார்வையாளர்களை மகிழ்வித்தனர். இறுதியாக மாணவி ஸ்மித்ரா நன்றியுரையாற்றினார்.

# சீர்காழியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகளை அமைச்சர் மெய்யநாதன் வழங்கினார்

சீர்காழி, டிச,24

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு பள்ளி மாணவ,மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகளை சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மெய்யநாதன் வழங்கினார்.



இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் மகாபாரதி தலைமை வகிக்க, மயிலாடுதறை நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் , மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் , வழிகாட்டுதலின்படி, மயிலாடுதுறை மாவட்டத்தில், சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதியில், பதினொன்றாம் வகுப்பு படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு கட்டணமில்லாமல் மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் 2,941 மாணவர்களுக்கும், 3,842 மாணவிகளுக்கும் கிட்டத்தட்ட 6,783 மாணவ, மாணவிகளுக்கும் ரூ.3 கோடியே 26 இலட்சம் மதிப்பிலான மிதிவண்டிகளை வழங்கி இருக்கிறோம்.

இந்த மாவட்டம் முழுவதும் மாணவிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. ஒரு காலத்தில் பெண்களுக்கான கல்வி மறுக்கப்பட்டது. ஆண்களுக்கான கல்வி மட்டுமே இருந்தது. பெண்களுக்கும் கல்வியை வழங்க வேண்டும் என்று குரல் கொடுத்தவர் தந்தை பெரியார். அதை செயல்படுத்த தொடங்கியவர் பேறிஞர் அண்ணா. அதை முழுமையாக செயல்படுத்தி காட்டியவர் நூற்றாண்டு விழாவின் நாயகர் கலைஞர்.

34 ஆண்டுகளுக்கு முன்னரே பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்கான திட்டத்தை தந்தவர் கலைஞர். படிப்படியாக உயர்ந்து, ஆண்களுக்கு இணையாகவும், அதைத் தாண்டியும் இன்றைக்கு உயர்ந்துள்ளது. படிப்பிலும், வேலையிலும் பெண்களுக்கென 30 சதவீத இடஒதுக்கீட்டை தந்தவர் நம் கலைஞர். நமது தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் பள்ளிக்கல்வித்துறைக்கு அதிகமாகநிதிஒதுக்கியுள்ளார். இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன் என்ற அடுக்கடுக்கான திட்டத்தை கொண்டு வந்து தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தியிருக்கின்றார்கள். பதவியேற்றதிலிருந்து 31 கலை அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்திருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் உயர்கல்வியோடு நிறுத்தும் சூழ்நிலையை மாற்றி உயர்கல்வியோடு நின்று விடக்கூடாது, கல்லூரிகளிலும் படிக்கவேண்டும்என்பதற்காக, ஒவ்வொரு மாவட்டங்களிலும், கலை அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளாண் கல்லூரி என எல்லா இடங்களிலும் தந்தவர் நம் கலைஞர் என்றால் அதை சிறப்பாக செயல்படுத்தி கொண்டிருப்பவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேல்நிலை முதலாமாண்டு பயிலும் சீர்காழி நகராட்சி மேல்நிலைப்பள்ளி 80 மாணவ, மாணவியர்களுக்கும்,சீர்காழி எல்எம்சி மேல்நிலைப்பள்ளி 114 மாணவ, மாணவியர்களுக்கும், சீர்காழி சியாமளா பெண்கள் மேல்நிலைப்பள்ளி211 மாணவ, மாணவியர்களுக்கும்,சீர்காழி சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளி 224 மாணவ, மாணவியர்களுக்கும் இலவச மிதிவண்டிகள் அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலை, முதன்மை கல்வி அலுவலர் அம்பிகாபதி, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அர்ச்சனா, சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி, கொள்ளிடம் ஒன்றியக்குழு தலைவர் ஜெயபிரகாஷ், சீர்காழி நகர்மன்ற துணைத்தலைவர் சுப்பராயன், முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் முத்துக்கனியன், பரமசிவம், பள்ளி தலைமையாசிரியர் அறிவுடைநம்பி மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# பாஜக அரசை கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் பெரியபாளையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்

ஊத்துக்கோட்டை, டிச24-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 142 பேரை இடைநீக்கம் செய்த மத்திய பாஜக அரசை கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்,எல்லாபுரம் மேற்கு ஒன்றியம்,பெரியபாளையம் பஸ் நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று மதியம் நடைபெற்றது.




இதற்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் நீலமேகம் தலைமை தாங்கினார். இதில், மாவட்ட பொறுப்பாளர் டேனிகிங்பால், கும்மிடிப்பூண்டி தொகுதி செயலாளர் வழக்கறிஞர் ஜீவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கடந்த 13-ம் தேதி நாடாளுமன்றத்தில் மர்ம நபர்களால் நடத்தப்பட்ட புகைக் குண்டு தாக்குதலை கண்டித்தும், 142 நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்ததை கண்டித்தும், பாஜக அரசின் சர்வாதிகாரப்போக்கை கண்டித்தும், இதற்குக் காரணமான மத்தியில் ஆட்சி செய்யும் பாஜக அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இதில், நிர்வாகிகள் ராவணன் வித்யாபதி, வழக்கறிஞர் காந்தி,சுகுமார், ராள்ளை பாபு,பா.நாகராஜ், காட்வின் கிறிஸ்டோபர் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அதிமுக மாநிலங்களவை உறுப்பினர் சி.வி.சண்முகம், காங்கிரஸ் மூத்த தலைவர் ஈவிகேஎஸ் இளங்கோவனுக்கு கொரோனா தொற்று?

சென்னை, டிச.24

நாடு முழுவதும் பரவலாக ஜே.என்.1 வகை கொரோனா தொற்று பரவிவருகிறது. தமிழகத்தில் தினமும் 20-க்கும் மேற்பட்டோர் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சென்னை, செங்கல்பட்டு, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் பாதிப்பு அதிகம் உள்ளது. அதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இணைநோயாளிகள், கர்ப்பிணிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் முகக் கவசம் அணியவேண்டும் என்று கடந்த வாரம் சுகாதாரத் துறை அறிவுறுத்தியது.

அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டு வருவதால், மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகள் மற்றும் உடன் வருபவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும் என்று சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.




சி.வி.சண்முகம், E V K S.இளங்கோவன்

இந்நிலையில், தமிழக முன்னாள் அமைச்சரும், அதிமுக மாநிலங்களவை உறுப்பினருமானசிவிசண்முகம் காய்ச்சல் காரணமாக சென்னை அப்போலோமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

சமீபத்தில்தான் அவர் சபரிமலை சென்று திரும்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல, சென்னை மியாட் மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாகசிகிச்சைபெற்றுவரும் காங்கிரஸ் மூத்த தலைவர் ஈவிகேஎஸ் இளங்கோவன் எம்எல்ஏவுக்கும் கரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக கூறப்படுகிறது. கொரோனா வைரஸ் புதிதாக உருமாற்றம் அடைந்ததே திடீரென்று தொற்று பரவல் அதிகரிக்க காரணம் என்று மருத்துவ நிபுணர்கள் கருதுகின்றனர். பரவலை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக சுகாதாரத் துறை தீவிரப்படுத்தியுள்ளது.

# சீர்காழி தாடாளன் கோவில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டு பெருமாள் வலது பாத தரிசனம்

சீர்காழி , டிச. 24-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் திரு விக்ரம நாராயண பெருமாள் எனப்படும் தாடாளன் பெருமாள் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் மூலவர் தனது இடது பாதத்தை ஆகாயத்தை நோக்கி தூக்கியவாரு உலகளந்த பெருமாளாக காட்சி தருகிறார்.



உற்சவர் நாடாளும் பெருமாள் லோகநாயகி தாயாருடன் அருள் பாலித்து வருகிறார். 108 திவ்ய தேசத்தில் 28வது திவ்ய தேசமான இக்கோவிலில் மூலவர் திருவிக்ரம நாராயணப் பெருமாள் வலது பாதத்தை ஆண்டு தோறும் ஏகாதசி தினத்தில் மட்டுமே பக்தர்களுக்கு தரிசனம் செய்ய முடியும்.

பெருமாளின் வலது பாதத்தில் அருகே ஓர் அடி உயரத்தில் தவிட்டு தாடாளன் விக்ரகத்தையும் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே பக்தர்கள் தரிசனம் செய்ய முடியும் மூலவர் வலது பாதம் மற்றும் தவிட்டு தாடாளன் பெருமாளை தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு பிறவிப் பிணி நீங்கும் என்பது ஐதீகம். பிரசித்தி பெற்ற இக்கோவிலில் ஏகாதசியை ஒட்டி சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஸ்ரீதேவி பூதேவி சமேத உற்சவர் தாடாளன் பெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனம் செய்து வைக்கப்பட்டு சாத்துமுறை நடைபெற்றது. தொடர்ந்து ரத்தின அங்கி அலங்காரத்தில் பெருமாள் சொர்க்கவாசல் அருகே எழுந்தருளி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து சொர்க்க வாசல் திறப்பு நிகழ்ச்சி நடந்தது. சொர்க்கவாசல் வழியே பெருமாள் எழுந்தருள கோவிந்தா கோவிந்தா என முழக்கமிட்டு பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

பெருமாள் கோவிலை வலம் வந்து வசந்த மண்டபம் எழுந்துருளினார். பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மூலவர் உலகளந்த பெருமாளின் வலது பாத தரிசனம் கண்டு பிரார்த்தனை செய்தனர். பூஜைகளை பத்ரிநாத் பட்டாச்சாரியார் செய்து வைத்தார்.

# ஆலங்குடி அருகே 3 மயில்கள் உயிரிழப்பு



ஆலங்குடி, டிச. 24-

ஆலங்குடி அருகே 3 மயில்கள் உயிரிழந்து கிடந்தது குறித்து வனத்துறையினர் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள கொத்தமங்கலம் ஊராட்சி சிதம்பரவிடுதி பகுதியில் உள்ள தோட்டத்தின் அருகே 3 மயில்கள் உயிரிழந்து கிடந்தன. அதற்கு அருகில் ஒரு மயில் உயிருக்கு போராடிய நிலையில் கிடந்துள்ளது. இதைப்பார்த்த அப்பகுதியினர் அளித்த தகவலைத்தொடர்ந்து, அங்கு சென்ற வனத்துறை அதிகாரிகள், உயிருக்கு போராடிய மயிலை மீட்டு கால்நடை மருத்துவனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும், 3 மயில்களையும், மர்மநபர்கள் வேட்டையாடினரா, தோட்டத்தில் விஷம் வைத்து கொல்லப்பட்டதா என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தாயார் அமராவதி அம்மாள் காலமானதையொட்டி, கடையநல்லூர் தி.மு.க. நகர செயலாளர் எஸ். அப்பாஸ் நிர்வாகிகளுடன் சென்று துக்கம் விசாரித்தார். நிகழ்ச்சியில் காளிமுத்து, மஜீத், பூஜை பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெருங்காடு கிராமத்தில் மாட்டுவண்டி எல்கைபந்தயம்

அறந்தாங்கி : டிச. 24,

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே பெருங்காடு கிராமத்தில் முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம் அவர்களின் 10-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மாட்டுவண்டி எல்கைப்பந்தயம் நடைபெற்றது.



பந்தயத்தை தமிழக சுற்றுச்சூழல் அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு கொடி அசைத்து தொடங்கி வைத்தார். பெரியமாடு, சிறியமாடு என இரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் தஞ்சை, கோவை, ஈரோடு, திருச்சி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட 80-க்கும் மேற்பட்ட இரட்டைமாட்டு வண்டிகள் போட்டியில் கலந்து கொண்டன.

போட்டியில் கலந்து கொண்ட மாட்டுவண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தைய இலக்கினை நோக்கி சீறிப்பாய்ந்தன. வெற்றி பெற்ற மாட்டுவண்டி உரிமையாளர்களுக்கு மொத்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரொக்கபரிசு மற்றும் கோப்பைகளுடன் ஆட்டுக்குட்டியும்வழங்கப்பட்டது. பந்தய நிகழ்சியினை சாலையின் இருபுறமும் நின்று ஆயிரக்கணக்கானோர் கண்டு ரசித்தனர்.

# சண்டிகார் பல்கலைக்கழகம் நடத்திய தேசிய கல்விக்கொள்கை கருத்தரங்கில் கவிஞர் தங்கம்மூர்த்தி பங்கேற்பு

புதுக்கோட்டை, டிச. 24-

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி சண்டிகார் பல்கலைக்கழகம் நடத்திய தேசிய கல்விக்கொள்கை கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.




பஞ்சாப் மாநிலம் சண்டிகார் பல்கலைக்கழகம் பள்ளி முதல்வர் மற்றும் தாளாளர்களுக்கான தேசியக் கல்விக் கொள்கை மற்றும் தொழில்நுட்பக் கல்வி குறித்த கருத்தரங்கம் நடத்தியது. இதில் நாடு முழுவதிலுமிருந்து பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள் கலந்து கொண்டனர். தேசிய நல்லாசிரியர் விருது மற்றும் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது பெற்ற கவிஞர் தங்கம்மூர்த்தி தமிழ்நாட்டின் சார்பாக கலந்தகொண்டார்.

கருத்தரங்கில் கல்விக் கொள்கை சார்ந்த பல்வேறு தலைப்புகளில் அமர்வுகள் இடம்பெற்றன. இதில் கவிஞர் தங்கம்மூர்த்தி தனது முப்பதாண்டு கால கல்விப் பயணத்தின் அனுபவங்களை கட்டுரையாக சமர்ப்பித்து உரையாற்றினார். அதில் பல ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய பள்ளியில் கடைப்பிடிக்கப்படும் 'புத்தகமில்லா தினம்' (No Book Day) என்ற நிகழ்வானது பள்ளி மாணவர்களுக்கு மன அழுத்தங்களை குறைத்து உற்சாகமாக தங்கள் படிப்பைத் தொடர உதவுகிறது என்ற கருத்து அரங்கில் பலரது பாராட்டைப் பெற்றது.

மேலும் வாரத்தோறும் புதன் கிழமைகளில் தன் பள்ளியில் நடத்தப்படுகின்ற மாணவர்களுக்கான தனித்திறன் வகுப்புகள் குறிப்பாக யோகா, கராத்தே, சிலம்பம், சதுரங்கம், அபாகஸ், வாய்ப்பாட்டு, கீபோர்டு, பரதம் மற்றும் ஜும்பா நடனம் ஆகிய வகுப்புகளில் மாணவர்கள் தங்கள் தனித்திறனை வளர்த்துக் கொண்டு மாவட்ட, மண்டல மாநில அளவிலான போட்டிகளில் பரிசுகளை பெறுகிறரர்கள் என்றும் தனது உரையில் குறிப்பிட்டார். கவிஞர் தங்கம்மூர்த்தியின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ஒரு முழுமையான கற்றல் கூழலை வளர்பப்தில், உலகளாவிய குடியுரிமையை ஊக்குவிப்பதில் மற்றும் புதுமையான கற்பித்தல் நடைமுறைகளை செயல்படுத்துதல் ஆகிய கருத்துக்களைப் பாராட்டி அவரது ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக்.மேல்நிலைப்பள்ளிக்கு "இணை பாடத்திட்ட செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் பள்ளி" (School with Excellence in Co-curricular Activities) என்ற விருதினை. சண்டிகார் பல்கலைக்கழக இணைவேந்தர் முனைவர் ஆர்.எஸ்.பாவா, மற்றும் இந்திய ராணுவ ஓய்வுபெற்ற பொது அலுவலர் லெப்டினன்ட் ஜெனரல் கன்வால் ஜீத்சிங் திலியான் ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர். சண்டிகார் பல்கலைக்கழகதின் தேசிய கல்விக்கொள்கை கருத்தரங்கில் தமிழ்நாட்டின் சார்பாக கலந்தகொண்டு விருதுபெற்ற கவிஞர் தங்கம்மூர்த்திக்கு கல்வியாளர்கள், பள்ளி முதல்வர்கள், அறிஞர்கள். கவிஞர்கள் பாரட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

# போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி

ஆவுடையார்கோவில் : டிச. 24,

ஆவுடையார்கோவில் அருகேயுள்ள பெருநாவலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையும் இணைந்து நடத்திய போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி ஆவுடையார்கோயில் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தொடங்கி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் (பொ) பேராசிரியர் வீ.பாலமுருகன் அவர்கள் தலைமை தாங்கினார். ஆவுடையார்கோயில் வட்டாட்சியர் மு.மார்டின் லூதர் கிங் அவர்கள் பேரணியைத் தொடங்கி வைத்து, போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகைகளை வழங்கி, சிறப்புரை ஆற்றினார். ஆவுடையார்கோயில் வட்டாட்சியர் மு.மார்டின் லூதர் கிங் அவர்கள் தலைமையில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

ஆவுடையார்கோயில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து தொடங்கிய இப்பேரணி முக்கிய வீதிகள் வழியாகச் சென்று, பாரத ஸ்டேட் வங்கி அருகில் நிறைவுற்றது. பேரணியில் மாணவர்கள் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு விளம்பர பதாகைகளை தாங்கி, விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கியும், விழிப்புணர்வு வாசகங்களை முழக்கமிட்டபடியும் சென்றனர்.




பாதுகாப்புஏற்பாடுகள் ஆவுடையார்கோயில் காவல்துறை அதிகாரிகள் செய்திருந்தனர். முன்னதாகக் கல்லூரி ரெட் ரிப்பன் கிளப் ஒருங்கிணைப்பாளர் ப.செந்தில்குமார் வரவேற்றார். நிறைவாக நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் (அலகு-1) மு.பழனித்துரை நன்றி கூறினார். போட்டிகள் மற்றும் பேரணி ஏற்பாடுகளைக் கல்லூரிப்பேராசிரியர்கள் அன்பரசன், ரா.ராஜலட்சுமி ஆகியோர் வழிகாட்டுதல்படி, நாட்டு நலப்பணித் திட்டம் அலகு-1 மாணவர்கள் மற்றும் தமிழ்த்துறை மாணவர்கள் செய்திருந்தனர்.

# பொன்னமராவதி அருகே வாழைக்குறிச்சியில் ஸ்ரீவரதராஜ பெருமாள் கோயிலில் சொர்க்கவாசல் திறப்பு

பொன்னமராவதி, டிச. 24-

பொன்னமராவதி அருகே வாழைக்குறிச்சி கிராமத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீவரதராஜ பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சொர்க்கவாசல் திறக்கும் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி அருகே வாழைக்குறிச்சி கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ தேவி, பூதேவி சமேத வரதராஜபெருமாள் பெருமாள் கோயில் உள்ளது. இத்தகைய சிறப்பு மிக்க வாழைக்குறிச்சி வரதராஜ பெருமாள் கேயிலில் வைகுண்ட ஏகாதசி விழாவை முன்னிட்டு நேற்று காலை 6.30 மணிக்கு சொர்க்க வாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்துகொண்ட ஏராளமான பொதுமக்கள் கோவிந்தா கோவிந்தா என்று முழக்கமிட்டு பெருமாளை வழிபட்டனர். இதில் சர்வ அலங்காரத்தில் வரதாஜ பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி சமேதராக காட்சியளித்தார். மேலும் இதே போன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து வைணவ தலங்களிலும் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

# வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் சார்பில் இரத்ததான முகாம்



தென்காசி : டிச. 24, முன்னாள் பிரதமர், பாஜகவின் மூத்த தலைவர் அடல் பிகாரி வாஜ்பாயின் 100-வது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக தென்காசி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் சார்பில் சிறப்பு இரத்த தான முகாம் நடைபெற்றது.

இந்த சிறப்பு இரத்ததான முகாமில் வாய்ஸ் ஆப் தென்காசிநிறுவனர் ஆனந்தன் தலைமை ஏற்று தொடங்கி வைத்தார், தென்காசி மாவட்ட சமூக ஆர்வலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், பாஜக பிரதிநிதிகள் மற்றும் இரத்ததான கொடையாளிகள், கலாமின் கனவுகள் அறக்கட்டளை என்எப்எஸ், சிங்கப்பெண்கள், நீட் ஃபார் சர்வீஸ், போதையில்லா தமிழகம், உள்ளிட்ட பல்வேறு தன்னார்வ அமைப்புகள் சார்பில் சுமார் 50-க்கும் மேற்பட்டோர் இரத்த தான முகாமில் கலந்து கொண்டு இரத்தக்கொடை வழங்கினர்.

இந்த இரத்ததான முகாமில் தென்காசி மக்களவைத் தொகுதி பாஜக பொறுப்பாளரான மக்கள் சேவகர் ஆனந்தன் பேசியதாவது, இந்தியாவில் தினந்தோறும் ஒன்றரை கோடி இரத்தம் தேவைப்படுகிறது. ஆனால் 20 முதல் 30 சதவீதத்திற்கு மேல் பற்றாக்குறையாக உள்ளது. அதன் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பாரத பிரதமர் நரேந்திர மோடி இரக்தான் அம்ரித் மகத்சோவ் என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்கள். இரத்ததானம் மூலம் உடல் ஆரோக்கியம் குறைகிறது என தவறான கண்ணோட்டம் உள்ளது. ஆனால் இரத்ததானம் செய்வதினால் உடல் ஆரோக்கியமும் வலிமையும் பெறுகிறது. அதனை மனதில் கொண்டு அனைவரும் இரத்ததானம் செய்வோம், ஆரோக்கியமாக வாழ்வோம் என பேசினார்கள்.

முகாமில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்த அனைவருக்கும் சான்றிதழ், நினைவு பரிசு மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. முகாமில் கலந்து கொண்ட தன்னார்வ அமைப்புகளுக்கு தென்காசி மக்களவை தொகுதி பாஜக பொறுப்பாளர் ஆனந்தன் சார்பாக மரியாதை செய்யப்பட்டது. இந்த முகாமில் மருத்துவர்கள், செவிலியர்கள், பாஜக தொண்டர்கள், சங்கரசுப்பிரமணியன், லட்சுமணபெருமாள், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் கருப்பசாமி, இராஜ்குமார், சுப்ரமணியன், சு.மு.முருகன், கோபி ஆகியோர் இரத்ததான முகாமில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கலைஞரின் நூற்றாண்டு விழா சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் அமைச்சர் ரகுபதி ஏற்பாட்டில் நடந்தது



திருமயம் , டிச. 24-

கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரகநகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற, சிறப்பு தனியார்துறைவேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் மற்றும் மகளிர் திட்டத்தின் சார்பில் இலவச திறன் பயிற்சிக்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வு, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி தலைமையில் நடைபெற்றது.பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் இளைஞர்கள், மாணவ, மாணவிகளின் நலனிற்காக எண்ணற்ற பல்வேறு சிறப்பான திட்டங்களையும், வேலைவாய்ப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டது. அந்த வகையில் இன்றையதினம் திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், சிறப்பு தனியார்துறைவேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் தொழில்துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 104-க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு தகுதியுள்ள நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுத்து உள்ளனர். அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கான பதிவு வழிகாட்டல், சுயதொழில், வங்கி கடன் உதவிகள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து பிரத்தியேக அரங்கம் அமைத்து ஆலோசனை அளிக்கப்படுகிறது. மேலும், மாவட்டத்தில் உள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டு இலவச திறன் பயிற்சிக்கு ஆட்களை தேர்வு செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

இத்தனியார்துறை முகாமில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ, பி.இ, நர்சிங் படிப்புகள் போன்ற கல்வித்தகுதியுடைய 18 முதல் 40 வயதிற்குட்பட்ட வேலைநாடும் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர்களும் பங்கேற்று, தங்களது தகுதிகளுக்கேற்ப பணிநியமனங்களை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

எனவே இளைஞர்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்களை உரிய முறையில் பெற்று தங்களது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொது) மோ.மணிகண்டன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ) பெ.வேல்முருகன், உதவி திட்ட அலுவலர் தில்லைமணி, செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மேலாண்மை இயக்குநர் ஆர்.வயிரவன், முதன்மை செயல் அதிகாரி ஏ.வி.எம்.எஸ்.கார்த்திக், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், வட்டாட்சியர் புவியரசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் திருச்செந்தூர், ஏரல் பகுதிகளில் சேதமடைந்த வீடுகளை கணக்கெடுக்கும் பணி தொடங்கியது



தூத்துக்குடி, டிச. 24-

ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் திருச்செந்தூர், ஏரல் பகுதிகளில் சேதமடைந்த வீடுகளை கணக்கெடுக்கும் பணி தொடங்கியது.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பெய்த கனமழை காரணமாக தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி நகரங்களில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. தூத்துக்குடியில் மழை இல்லை என்றாலும் சில இடங்களில் தேங்கி நின்ற வெள்ளம் இன்னும் வடியவில்லை.

வெள்ளத்தில் சில வீடுகள் இடிந்து விழுந்திருக்கின்றன. பைக்குகள், கார்கள், பேருந்துகள் என அனைத்து வகை வாகனங்களும் கடுமையாக சேதமடைந்துள்ளன. வீடுகளை இழந்து மக்கள் பரிதவித்து வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் பெய்த கனமழை காரணமாக பல இடங்களில் மழைநீர் தேங்கியது. ரயில் பயணிகள் 800 பேர் ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையத்திலேயே சிக்கிக்கொண்ட நிலையில், அவர்கள் பல்வேறு மீட்பு நடவடிக்கைகளுக்கு பிறகு மீட்கப்பட்டனர். இந்த மழை கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவு என்று சொல்லப்படுகிறது.

ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்த நிலையில், அரசினுடைய நிவாரணத்தை எதிர்பார்த்து பல குடும்பங்கள் காத்திருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, தூத்துக்குடியில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா நேரில் ஆய்வு மேற்கொண்டார். மறவன்மடம், அந்தோணியார்புரம், குறிஞ்சி நகர், முத்தம்மாள் காலனி உள்ளிட்ட இடங்களில் தலைமைச் செயலாளர் ஆய்வு நடத்தினார்.

இந்நிலையில், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் திருச்செந்தூர், ஏரல் பகுதிகளில் சேதமடைந்த வீடுகளை கணக்கெடுக்கும் பணி தொடங்கியிருப்பது அப்பகுதி மக்களுக்கு சற்று ஆறுதல் கொடுத்துள்ளது. வட்டாட்சியர் தலைமையிலான வருவாய்த்துறை அலுவலர்கள் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பகுதியாக சேதமடைந்த வீடுகள், முழுமையாக சேதமடைந்த வீடுகளை கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளது.

# அறந்தாங்கி அருகே 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட நீர்த்தேக்க தொட்டி விரிசலுடன் இடிந்து விழும் அபாயம்



அறந்தாங்கி , டிச. 24-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே ஆளப்பிறந்தான் ஊராட்சிக்குட்பட்ட பெருமாள்பட்டி குடியிருப்பு பகுதியில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு அப்பகுதி பொதுமக்கள் குடிநீர் தேவைக்காக கட்டப்பட்ட 10 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி தற்போது சிமெண்ட் பூச்சுகள் பெயர்ந்து, இரும்பு கம்பிகள் துருபிடித்து. விரிசல் ஏற்பட்டதோடு நீர்கசிந்து எந்த நேரத்திலும் இடிந்துவிழும் ஆபத்தான நிலையில் இருக்கிறது.

மேல்நிலை நீர்தேக்க தொட்டியை இடித்து அகற்றிவிட்டு அப்புறப்படுத்த வேண்டும் அருகே கருப்பர் கோவில் இருப்பதாலும் பள்ளிக் குழந்தைகள் செல்லக்கூடிய சாலையின் அருகே இருப்பதால் அருகில் அச்சத்துடன் செல்லவேண்டிய நிலை இருப்பதாகவும் பெரிய அசம்பாவிதம் நடைபெறுவதற்கு முன் உடனே மேல்நிலை நீர்தேக்க தொட்டியை இடித்து அகற்றிவிட்டு புதிய நீர்த்தேக்க தொட்டி கட்டித்தர அப்பகுதி மக்கள் தமிழக அரசுக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கும் போது; மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் அருகே பொதுக்கோவில் இருப்பதாலும் கோவில் முன்பு பள்ளி குழந்தைகள் விளையாடுவதும் அமர்ந்து படிப்பதுமாக இருக்கிறார்கள் அருகில் மின்கம்பி உயர்கள் செல்வதாலும் நீர் தொக்க தொட்டியின் நிலை மிகவும் மோசமாக இருப்பதால் எந்த நேரத்திலும் இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது. இது தொடர்பாக பலமுறை ஊராட்சிஒன்றிய அதிகாரிகளிடம் கோரிக்கைவைத்தும்கிராமசபை கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றியும் தற்போது வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று வேதனையுடன் தெரிவித்தனர்.



நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், ராமதேவம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# திமுகவில் பரபரப்பு : பொன்முடியுடன் மு.க.அழகிரி திடீர் சந்திப்பு

சென்னை : டிச. 24, சொத்துக்குவிப்பு வழக்கில் 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அமைச்சர் பதவி பறிக்கப்பட்ட நிலையில், பொன்முடியை திடீரென மு.க.அழகிரி சந்தித்து பேசியிருப்பது திமுகவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக உயர்கல்வித்துறை அமைச்சராகஇருந்தபொன்முடி, அவரது மனைவி விசாலாட்சி மீதானசொத்துக்குவிப்புவழக்கில் இருந்து கீழமை நீதிமன்றம் விடுதலை செய்ததை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெயச்சந்திரன் ரத்து செய்தார். மேலும், பொன்முடியும், அவரது மனைவியும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்ததோடு, இருவருக்கும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.50 லட்சம் அபராதம் விதித்தார். இந்த தீர்ப்பையடுத்து, பொன்முடியின் எம்எல்ஏ பதவி பறிக்கப்பட்டதோடு, அமைச்சர் பதவியும் தானாகவே தகுதியிழப்பானது. இதையடுத்து, 3 ஆண்டு தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பொன்முடி மேல்முறையீடு செய்ய உள்ளார். அதற்கு 30 நாட்கள் அவகாசம் வழங்கியுள்ளது உயர் நீதிமன்றம்.

இந்தநிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலினை திமுக துணைப்பொதுச்செயலாளர் பொன்முடி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துப்பேசினார். அப்போது, வழக்கு தொடர்பான மேல்முறையீடு உள்ள விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியானது. இதனிடையே, முன்னாள் அமைச்சர் பொன்முடியை முன்னாள் எம்.பி-யான மு.க.அழகிரி நேற்று சந்தித்தார். பொன்முடி வீட்டில் இந்த சந்திப்பு நடைபெற்றது. சொத்துக்குவிப்பு வழக்கில் 3 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ள பொன்முடியை, மு.க. அழகிரி சந்தித்துள்ள நிகழ்வு திமுக மற்றும் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழர்கள் செலுத்திய ஒரு ரூபாய் வரிக்கு பிரதமர் இரண்டு ரூபாய் திருப்பி கொடுத்துள்ளார் : அண்ணாமலை

சென்னை : டிச. 24, "மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசிய உண்மைகள் திமுக அமைச்சர்களை கடுமையாக பாதித்துள்ளதாக அறிகிறேன். தமிழக மக்களின் வரி பணத்தில் இருந்து கோபாலபுரத்தின் இளவரசரும் மாப்பிள்ளையும் ஒரே ஆண்டில் 30,000 கோடி ரூபாய் முறைகேடாக சம்பாதித்தார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை, தமிழகத்தின் முன்னாள் நிதி அமைச்சர் சொன்ன 30 ஆயிரம் கோடி எங்கே என்றுதான் கேட்கிறோம்" என அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழக அரசின் மீதும் அமைச்சர்கள் மீதும்பல்வேறுகுற்றச்சாட்டுகளை முன்வைத்தார். பல்வேறு கேள்விகளையும் எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த அமைச்சர் தங்கம் தென்னரசு, "நாட்டு மக்கள் அனைவரும் அறிந்த இந்த பாதிப்புச் செய்தி, இந்தியாவில் ஒரே ஒருவருக்கு மட்டும் தெரியவில்லை. அவர்தான் இந்தியாவின் நிதி அமைச்சராக இருக்கிற நிர்மலா சீதாராமன் அவர்கள். ஏதோ எதிரி நாட்டின் மீது போர் தொடுக்கும் எரிச்சல் மொழியில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாரமன் அளித்துள்ள பதில் தமிழ்நாட்டு மக்களை ஒட்டுமொத்தமாக அவமானப்படுத்துவது ஆகும்" என விமர்சனம் செய்தார்.

இந்த நிலையில் அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, "மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய உண்மைகள் திமுக அமைச்சர்களை கடுமையாக பாதித்திருப்பதாக அறிகிறேன்.

தமிழக மக்கள் செலுத்திய வரியை தான் கேட்கிறோம் என்று வழக்கம் போல் திசை திருப்பும் வேலையில் இறங்கியுள்ள திமுக அமைச்சர்களுக்கு சில கேள்விகள். தமிழக மக்களின் வரி பணத்தில் இருந்து கோபாலபுரத்தின் இளவரசரும் மாப்பிள்ளையும் ஒரே ஆண்டில் 30,000 கோடி ரூபாய் முறைகேடாக சம்பாதித்தார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை, தமிழகத்தின் முன்னாள் நிதி அமைச்சர் சொன்னார். அந்த 30,000 கோடி எங்கே என்று தான் நாங்கள் கேட்கிறோம்.

விளம்பரத்திற்காக ஆட்சி நடத்தி ஸ்டிக்கர் ஒட்டும் பணியில் பொழுதை போக்கும் நீங்கள் இனியும் பொய்களை சொல்லி மக்களை ஏமாற்ற முடியாது. தமிழர்கள் செலுத்திய ஒரு ரூபாய் வரிக்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தலைமையிலான மத்திய அரசு இரண்டு ரூபாய் திருப்பி கொடுத்துள்ளது. அதை ஊழல் செய்யாமல் மக்களிடம் சென்று உங்களால் சேர்க்க முடியவில்லை என்றாலும் பரவாயில்லை அதை தடுக்காதீர்கள்" என குறிப்பிட்டுள்ளார்.

# எண்ணூரில் எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட 6,700 குடும்பங்களுக்கு தலா ரூ.7,500 நிதி

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை : டிச. 24, சென்னை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 4, 6, மற்றும் 7 ஆகிய பகுதிகளில் எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட 6,700 குடும்பங்களுக்கு தலா ரூ.7,500 வீதம் மொத்தம் 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கிட தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "கொசஸ்தலை ஆற்றில் எண்ணூர் முகத்துவாரபகுதியில்கடந்த 05.12.2023 அன்று ஏற்பட்ட எண்ணெய் கசிவினை அகற்றிட தமிழக அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நிகழ்வில் காட்டுக்குப்பம். சிவன்படைகுப்பம். எண்ணூர் குப்பம் முகத்துவாரகுப்பம். தாழங்குப்பம்.நெட்டுக்குப்பம். வ.உ.சி நகர். உலகநாதபுரம் மற்றும் சத்தியவாணி முத்து நகர் ஆகிய கடலோர மீனவ கிராமங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடிவலைகளில் எண்ணெய் படிந்து சேதம் ஏற்பட்டது. மேலும் இக்கிராமங்களை சார்ந்த மீனவர்கள் எண்ணெய் கசிவினால் மீன்பிடித் தொழிலுக்கு செல்ல இயலாததால் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு, தமிழக முதல்வர் மு.கஸ்டாலின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் STT அறிவிக்கப்பட்டு, அத்தொகையும் ஏற்கெனவேபாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கூடுதலாக எண்ணெய் கசிவினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மேற்கண்ட மீனவகிராமங்களை சார்ந்த 2,301 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ரூ.12,500 வீதமும் மேலும் எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட 787 மீன்பிடி படகுகளை சரிசெய்திட படகு ஒன்றிற்கு தலா ரூ.10,000 வீதமும் மொத்தம் 3 கோடி ரூபாய் அரசினால் ஒப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நிவாரணத் தொகை பாதிக்கப்பட்ட மீனவர்களின் வங்கி கணக்குக்கு வரவு வைக்கப்பட்டு வருகிறது.

மேலும் சென்னை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 4, 6, மற்றும் 7 ஆகிய பகுதிகளில் எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட 6,700 குடும்பங்களுக்கு தலா ரூ.7500 வீதம் மொத்தம் 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கிட தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிவாரணத் தொகையினை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குஅவர்களது வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். எனவே. மிக்ஜாம் புயல் கனமழையினால் ஏற்பட்ட எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட 9,001 குடும்பங்களுக்கு 8 கோடியே 68 இலட்சம் ரூபாய் வழங்கிட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2024 மக்களவைத் தேர்தல் : காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை குழு தலைவராக ப.சிதம்பரம் நியமனம்



புதுடெல்லி : டிச. 24, வரும் 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கான அறிக்கை தயாரிக்கும் குழுவை அமைத்த காங்கிரஸ் கட்சி அதன் தலைவராக மூத்த காங்கிரஸ் தலைவர், முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரத்தை நியமித்துள்ளது.

16 பேர் கொண்ட குழுவில் கர்நாடகா முதல்வர் சித்தராமையா, மூத்த தலைவர்கள் ஆனந்த் சர்மா, ஜெய்ராம்ரமேஷ், சசிதரூர் மற்ற முக்கிய உறுப்பினர்களாக உள்ளனர். காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வத்ராவும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளார். சத்தீஸ்கர் மாநில முன்னாள் துணை முதல்வர் டி.எஸ்.சிங் தியோ தேர்தல் அறிக்கை குழுவின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்களவை துணைத் தலைவர் கவுரவ் கோகாய், மாநிலங்களவை உறுப்பினர்கள் ரஞ்ஜீத் ராஜன், இம்ரான் பிரதாப்கர்கி, குஜராத் எம்எல்ஏ ஜிக்னேஷ் மேவானி, அகில இந்திய தொழில்துறை காங்கிரஸ் தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி, பட்டியல், பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் துறை ஒருங்கிணைப்பாளர் கே.ராஜு ஆகியோர் குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டம் நடந்த அடுத்த நாளில் இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தக் கூட்டத்தில், 2024 மக்களவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாக இணைந்து செயல்பட்டால்தான் பாஜகவை வீழ்த்த முடியும் என்றும், மக்களவைத் தேர்தலில் மாநிலக் கட்சிகளுக்குத் தேவையான இடங்களைக் கொடுத்து, பாஜகவை வீழ்த்த திட்டம் வகுக்கவேண்டும் என்றும் ராகுல் அப்போது கருத்து தெரிவித்தார். மேலும் வரும் மக்களவைத் தேர்தலில் பாஜகவை எதிர்க்க இண்டியா கூட்டணியை வலுவான கூட்டணியாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் காங்கிரஸ் எடுக்கும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# காயத்தால் ஆப்கன் தொடரில் இருந்து சூர்யகுமார் யாதவ் விலகல்



**மும்பை : டிச. 24,**

**தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான தொடரின் போது கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ் ஜனவரி 11ம் தேதி தொடங்கும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடரில் இருந்து விலகியுள்ளார்.**

ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த 3வது டி20 போட்டியின்போது பீல்டிங் செய்யும் போது சூர்யகுமார் யாதவ்வுக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இந்த காயம் குணமாக ஆறு வாரங்கள் ஆகும் என்பதால் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் இருந்து விலகியுள்ளார். இதுதொடர்பாக பேசியுள்ள பிசிசிஐ அதிகாரி ஒருவர், "காயம் காரணமாக சூர்யகுமார் யாதவால் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக விளையாட முடியாது. டெஸ்டுக்கு தேர்வு செய்யப்பட வாய்ப்பில்லை என்பதால், ஐபிஎல்லில் விளையாடுவதற்கு முன்பு அவரது உடற்தகுதியை சரிபார்க்க பிப்ரவரி மாதம் நடக்கும் ரஞ்சி டிராபியில் மும்பைக்காக விளையாடுவார்" என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல் காயத்தால் அவதிப்பட்டு வரும் ஹர்திக் பாண்டியாவும் தற்போதைக்கு இந்திய அணியில் இடம்பிடிக்க வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகிறது. ஏற்கனவே விரல் முறிவு காயத்தால் மற்றொரு இந்திய வீரர் ருதுராஜ் கெய்க்வாட் தென் ஆப்பிரிக்க தொடரில் இருந்து விலகியுள்ளார். இஷான் கிஷன் சமீபத்தில் தென் ஆப்ரிக்க டெஸ்ட் தொடரில் இருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக பங்கேற்கவில்லை. அவரும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் பங்கேற்பதில் சந்தேகம் நிலவுவதால், ஜிதேஷ் ஷர்மாவுக்கு இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்கலாம் என்று கூறப்படுகிறது.

# பத்மஸ்ரீ விருதுகள் 'ரிட்டன்' அறிவிப்பு : அமைச்சர் அனுராக் தாக்கூர் பதிலடி

**பெங்களூர் : டிச. 24,**

**மல்யுத்த வீரர்கள் பத்மஸ்ரீ விருதுகளைத் திரும்ப அளிப்பதாக அறிவித்துள்ள நிலையில், இதுதொடர்பாக மத்திய விளையாட்டு துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் கூறுகையில், தான் ஏற்கெனவே நிறைய பேசிவிட்டதாக தெரிவித்துள்ளார்.**

இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் தலைவராக, பாலியல் புகாரில் சிக்கிய பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர் சஞ்சய் சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மல்யுத்த வீராங்கனை சாக்சி மாலிக், விளையாட்டை விட்டு விலகுவதாக அறிவித்தார். அவருக்கு ஆதரவாக மல்யுத்த வீரர்கள் பஜ்ரங் புனியா, வீரேந்தர் சிங் யாதவ் ஆகியோர் தங்களது பத்மஸ்ரீ விருதை திரும்ப அளிப்பதாக அறிவித்தனர்.

இந்நிலையில், பெங்களூரில் உள்ள இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின், நேதாஜி சுபாஷ் தெற்கு மையத்தில் விடுதிக் கட்டிடங்கள், செயற்கை தடகள ஓடுதளம் ஆகியவை தொடக்கவிழா நடைபெற்றது. இதில், புதிய திட்டப் பணிகளை, மத்திய விளையாட்டு துறை அமைச்சர் அனுராக்தாக்கூர் பங்கேற்று பேசினார்.

அப்போது அவரிடம் மல்யுத்த சம்மேளன (டபிள்யூஎப்ஐ) விவகாரத்தில்



வீரர், வீராங்கனைகளின் எதிர்ப்பும், பஜ்ரங் பூனியா, வீரேந்திர்சிங்யாதவ்ஆகியோர் பத்மஸ்ரீ விருதுகளை திரும்ப அளிப்பதாக அறிவித்துள்ளது குறித்தும் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அனுராக் தாக்கூர், "நான் ஏற்கெனவே போதிய அளவு பேசிவிட்டேன். இதற்கு மேல் எதுவும் கூறுவதற்கு இல்லை. ஹாங்ஜோ ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் நமது விளையாட்டு வீரர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்றனர். இதுதான் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

நாம் பல முக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளோம். கடந்த ஆண்டு முதல் தாமஸ் கோப்பையை நாம் வென்றோம். ஹாக்கி, தடகளம் மற்றும் பிற போட்டிகளிலும் நாம் நிறைய வெற்றி பெற்றிருக்கிறோம். எனவே, வெற்றி பெற்ற சாம்பியன்கள் தங்களது அறிவையும், அனுபவத்தையும் இளம் விளையாட்டு வீரர்களுக்கு கடத்த வேண்டும். இது எதிர்காலத்தில் நமக்கு உதவும்" என்றார்.

# சாக்ஷி, பஜ்ரங்கை அடுத்து மல்யுத்த வீரர் வீரேந்தர் சிங் விலகல் பத்மஸ்ரீ விருதை திருப்பிக் கொடுப்பதாக அறிவிப்பு

**புதுடெல்லி : டிச. 24,**

**சாக்ஷி மாலிக், பஜ்ரங் புனியாவைத் தொடர்ந்து மல்யுத்த வீரர் வீரேந்தர் சிங்கும் மல்யுத்த விளையாட்டில் இனி ஈடுபட போவதில்லை என அறிவித்துள்ளார்.**

பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் மீது பாலியல் குற்றச்சாட்டு கூறிவரும் சாக்ஷி மாலிக் உள்ளிட்ட வீராங்கனைகளுக்கு ஆதரவளிக்கும் விதமாக வீரேந்தர் சிங் இந்த முடிவை எடுத்துள்ளார். மேலும் தனது பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைக்கப் போவதாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ள வீரேந்தர்



சிங், "எனது சகோதரியும், தேசத்தின் மகளுமான சாக்ஷி மாலிக்குக்காக எனது பத்மஸ்ரீ விருதை திரும்ப ஒப்படைக்கிறேன். பிரதமர் மோடி ஜி, உங்களின் மகளும், எனது சகோதரியுமான சாக்ஷி மாலிக்கை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். இந்த விவகாரத்தில் தேசத்தின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் தங்களின் முடிவை தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

வரலாறு சினிமா

# வெள்ள நிவாரணம் வழங்கிய அறந்தாங்கி நிஷா கட்டிப்பிடித்து கண்ணீர் விட்ட மக்கள்

**தூத்துக்குடி : டிச. 24,**

**கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மக்களுக்கு சின்னத்திரை நடிகை அறந்தாங்கி நிஷா நிவாரணப் பொருட்களை அளித்தார். அப்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் நிஷாவை கட்டிப்பிடித்து அழுத சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**



பெருமழை பாதிப்பில் இருந்து தூத்துக்குடி மெல்ல மீண்டு வருகிறது. இந்த நிலையில், நிறைய தன்னார்வலர்களும் மக்களின் துயர் துடைக்க அவர்களுக்கு உதவி வருகின்றனர். இதில் திரைப்பிரபலங்கள் பலரும் மக்களுக்கு உதவ முன்வந்துள்ளனர். நடிகர்கள் விஜய், ரஜினி உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி வருகின்றனர். இந்த நிலையில், சின்னத்திரை நடிகை அறந்தாங்கி நிஷாவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிநீர், மெழுகுவர்த்தி, நாப்கின் போன்ற நிவாரண பொருட்களை வழங்கியுள்ளார்.

அறந்தாங்கி நிஷா வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கைகளைப் பற்றி அவர்களுக்கு ஆறுதல் கூறினார். அப்போது அந்த மக்கள் அவரிடம் கதறி அழுத காட்சி நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அறந்தாங்கி நிஷாவின் இந்த செயல் சமூக வலைதளத்தில் ட்ரெண்டாகி வருகிறது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் துயர் குறித்துப் பேசி இருக்கும் நிஷா, "தூத்துக்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் இதிலிருந்து மீள இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், மிகவும் வருத்தமாக இருக்கிறது. நல்ல மனம் படைத்தவர்கள் அனைவரும் இணைந்து இந்த மக்களை கைதூக்கி விட வேண்டும்" என தெரிவித்துள்ளார். ஏற்கெனவே, சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி தன்னாலான உதவிகளைச் செய்தார் நிஷா என்பது குறிப்பிடத்தக்கது.

# "இதயம் நொறுங்குகிறது" சாக்ஷி மாலிக் விலகலால் ரித்திகா சிங் வேதனை

**சென்னை : டிச. 24,**

**"மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக்கை இப்படிப் பார்க்கும்போது இதயம் நொறுங்குகிறது" என குத்துச்சண்டை வீராங்கனையும், நடிகையுமான ரித்திகா சிங் கவலை தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில், "சாக்ஷி மாலிக் போன்ற ஜகான் ஒருவரை இந்த நிலைமையில் பார்க்கும்போது இதயம் நொறுங்குகிறது. ஒலிம்பிக்கில் பதக்கம் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்த ஒருவர் தனது கனவுகளையும், நம்பிக்கையையும் இத்தனை ஆண்டு கால கடின உழைப்பையும் கைவிட்டு, 'நான் விலகுகிறேன்' என சொல்வது மோசமான நிலை. போராட்டத்தின்போது அவரை அவமதித்தார்கள், இப்போது இப்படியொரு நிலைக்கு ஆளாக்கியுள்ளனர். இது கொடுமையானது" என பதிவிட்டுள்ளார்.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக, அந்த அமைப்பின் முன்னாள் தலைவரும், பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் நெருங்கிய உதவியாளர் சஞ்சய் சிங் தேர்வு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதன் எதிரொலியாக "மல்யுத்தத்திலிருந்து விலகுகிறேன்" என்று ஒலிம்பிக் வீராங்கனை சாக்ஷி மாலிக் கண்ணீர் மல்க கூறியிருந்தார்.

அவர், "நாங்கள் உண்மையாக தொடர்ந்து போராடினோம். ஆனால், பிரிஜ்பூஷன்போன்றஒருவரின் தொழில் பங்குதாரரும், அவரின் நெருங்கிய உதவியாளருமான சஞ்சய் சிங் மல்யுத்த கூட்டமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். எனவே, நான் மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன். பெண் ஒருவர் தலைவராக வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். ஆனால், அது நடக்கவில்லை" என்று சாக்ஷி கூறினார். அவர் கண்ணீருடன் பேசும் புகைப்படங்கள் வைரலாகின. இதனைத் தொடர்ந்து இந்திய மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா பத்மஸ்ரீ விருதை திரும்ப ஒப்படைக்க முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

# பிரபாஸின் 'சலார்' முதல் நாளில் ரூ.178 கோடி வசூல்



**சென்னை : டிச. 24,**

**பிரபாஸ் நடிப்பில் வெளியாகியுள்ள 'சலார்' திரைப்படம் முதல் நாள் உலக அளவில் ரூ.178.7 கோடியை வசூலித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது இந்த ஆண்டின் அதிகபட்ச முதல் நாள் வசூல் சாதனை என்பது குறிப்பிடத்தக்கது.**

'கேஜிஎஃப்' பட புகழ் பிரசாந்த் நீல் இயக்கத்தில் பிரபாஸ் நடித்துள்ள படம் 'சலார்'. ஹோம்பாளே பிலிம்ஸ் சார்பில் விஜய் கிரகந்தூர் இப்படத்தை தயாரித்துள்ளார். இதில் பிரபாஸ் தவிர்த்து ஸ்ருதிஹாசன், பிருத்விராஜ், ஜெகபதி பாபு உட்பட பலர் நடித்துள்ளனர். ரவி பஸ்ரூர் படத்துக்கு இசையமைத்துள்ளார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இப்படம் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு திரையரங்குகளில் பான் இந்தியா முறையில் வெளியானது.

இந்தப்படம் கலவையான விமர்சனங்களைப் பெற்று வரும் நிலையில், முதல் நாள் உலகம் முழுவதும் ரூ.178.7 கோடியை வசூலித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டும் படம் ரூ.95 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளது. இதன்மூலம் இந்த ஆண்டு வெளியான படங்களில் முதல் நாளில் அதிகபட்ச வசூலை குவித்த படம் என்ற பெருமையை 'சலார்' பெற்றுள்ளது. ஷாருக்கானின் 'ஜவான்' ரூ.129 கோடியுடன் இரண்டாம்இடம்பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஹிருத்திக் ரோஷனின் அடுத்த சரவெடி வெளியானது பைட்டர் படத்தில் இருந்து புரமோஷனல் பாடல்

**மும்பை : டிச. 24,**

**'பேங் பேங்' (2014) மற்றும் 'வார்' (2019) ஆகிய படங்களின் வெற்றிக்கு பிரபு ஹிருத்திக்சித்தார்த் ஆனந்த் வெற்றிகரமான கூட்டணி மூன்றாவது முறையாக இணைந்து இருக்கும் படம் தான் ஃபைட்டர்.**




இந்த படத்தில் ரித்திக் ரோஷன் ஷம்ஷேர் பதானியா என்ற போர் விமான பைலட் ஆக நடித்துள்ளார். மேலும் இந்த படத்தில் தீபிகா படுகோன் மற்றும் அனில் கபூர் உள்ளிட்ட நட்சத்திர நடிகர்களும் உள்ளனர். ஃபைட்டர் படத்தின் டீஸர் ஏற்கனவே வெளியாகி உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிலையில், தற்போது ஃபைட்டரின் புரமோஷன் பாடலான 'இஷ்க் ஜெய்சா குச்' பாடலில் சூப்பர் ஸ்டார் ஹிருத்திக் ரோஷனின் அசாதரான நடன அசைவுகளை மீண்டும் வழங்கி உள்ளார். கடந்த வாரம் வெளியான ஃபைட்டர் படத்தின் முதல் பாடலான 'ஷேர் குல் கயே' பாடலில் சூப்பர் ஸ்டார் ஹிருத்திக் ரோஷன் தனது அசாத்திய நடன அசைவுகளால் இந்தியா முழுவதும் உள்ள ரசிகர்களை கவர்ந்தார். ஃபைட்டரின் சமீபத்திய புரமோசனல் பாடலான 'இஷ்க் ஜெய்சா குச்' மூலம் நடிகர் ஹிருத்திக் ரோஷன் தனது அசாத்திய நடன திறமையை மீண்டும் வெளிப்படுத்தி உள்ளர்.

இந்த பாடல் ஹிருத்திக் ரோஷனின் மற்றொரு மறக்க முடியாத ஹூக்ஸ்டெப்பையும், ரசிகர்களுக்கு மற்றொரு ஹிட் பாடலையும் வழங்கி உள்ளது. ஹிருத்திக் ரோஷனின் நடன அசைவுகள் மட்டுமின்றி, பாடலின் ஹைலைட் அவரின் கவர்ச்சிகரமான உடல் அசைவுகள் ஆகும். இதன் மூலம் இந்தியவின் ஃபிட்னஸ் ஐகானாக இருப்பதை மீண்டும் நிரூபித்துள்ளார். மேலும் இந்தியாவின் கிரேக்க கடவுள் பட்டத்திற்கு ஏற்றவாறு உள்ளார். ஹிருத்திக் ரோஷனின் ஏக் பால் கா ஜீனா, மெயின் ஐசா கியூன் ஹூன், தூம் அகெய்ன், பேங் பேங், குங்ரூ மற்றும் ஷேர் குல் கயே போன்ற புகழ்பெற்ற நடனப் பாடல்களில் 'இஷ்க் ஜெய்சா குச்' ஹூக்ஸ்டெப் இணைந்துள்ளது.

'இஷ்க் ஜெய்சா குச்' பாடலில் ஹிருத்திக் ரோஷன் தீபிகா படுகோனேவுடன் நடனமாடி உள்ளார். இவர்கள் இருவருக்கும் இடையேயான கெமிஸ்ட்ரி நன்றாக ஒன்கவுட் ஆகி உள்ளது. இந்தியாவின் 75வது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனவரி 25, 2024 அன்று திரையரங்குகளில் 'ஃபைட்டர்' வெளியாக உள்ளது. இந்த படம் ரசிகர்களுக்கு விருந்தாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேச திரைப்பட விழாவில் 'விடுதலை'

**சென்னை : டிச. 24,**

**புனேவில் நடைபெற உள்ள சர்வதேச திரைப்பட விழாவில் நடிகர் சூரி நடித்துள்ள 'விடுதலை' உட்பட 3 தமிழ் படங்கள் திரையிட தேர்வு செய்யப்பட்டுள்ளன.**



22-வது சர்வதேச திரைப்பட விழா புனேவில் ஜனவரி 18 முதல் 25-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த திரைப்பட விழாவில் உலகின் சிறந்த திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. இந்த விழாவுக்கு தேர்வான தமிழ்ப் படங்கள் குறித்து தற்போது அறிவிப்பு வெளியாகியுள்ளது

இந்த விழாவில் திரையிட இயக்குநர் வெற்றிமாறனின் இயக்கத்தில் நடிகர் சூரி நடித்துள்ள 'விடுதலை' திரைப்படம் திரையிடப்பட உள்ளது. அதேபோல இயக்குனர் சீனு ராமசாமியின் 'இடி முழக்கம்', இயக்குனர் ஜெயப்பிரகாஷின் 'காதல் என்பது பொதுவுடமை' ஆகிய தமிழ்ப் படங்களும் தேர்வாகியுள்ளன.

அதேபோல், மலையாள மொழியில் இருந்து மம்முட்டி, ஜோதிகா நடிப்பில் வெளியான 'காதல் தி கோர்', ஜோஜி ஜார்ஜ் நடித்த 'இரட்டா' ஆகிய இரண்டு படங்களும் திரையிடப்படவுள்ளன.

# வருடும் மெலோடி : தனுஷின் 'கேப்டன் மில்லர்' 2-வது சிங்கிள்

**சென்னை : டிச. 24,**

**தனுஷ் நடிக்கும் 'கேப்டன் மில்லர்' படத்தின் இரண்டாவது சிங்கிளான 'உன் ஒளியிலே' வெளியாகி ரசிகர்களிடையே கவனம் பெற்று வருகிறது.**

'சாணிக்காயிதம்', 'ராக்கி' படங்களை இயக்கிய அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் நடிகர் தனுஷ் நடித்துள்ள படம் 'கேப்டன் மில்லர்'. பீரியட் படமாக உருவாகும் இந்தப் படத்துக்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தில் பிரியங்கா அருள் மோகன் நாயகியாக நடித்துள்ளார்.

சந்தீப் கிஷன், நிவேதிதா சதிஷ், ஜான் கொக்கேன் உட்பட பலர் நடித்துள்ளனர். இந்தப் படம் 3 பாகங்களாக உருவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்படத்தில் கன்னட நடிகர் சிவராஜ் குமார் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ள இப்படத்தின் முதல் பாடலான 'கில்லர் கில்லர்' பாடல் கடந்த மாதம் வெளியானது. இந்நிலையில் தற்போது படத்தின் இரண்டாம் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது.

ஷான்ரோல்டன்பாடியுள்ள இப்பாடலை கேபர் வாசுகி எழுதியுள்ளார். காதல் மெலோடியான இப்பாடலின் தொடக்கத்தில், 'விதி சிரிக்குதா அழுகுதா தெரியல...' என ஜி.வி.பிரகாஷ் குரல் ஒலிக்கிறது. தொடர்ந்து வரும் 'உன் ஒளியிலே என் நிழல் விரியுதே... உன் வெளிச்சத்தில் என் இருள் புரியுதே' என்ற ஷான் ரோல்டன் குரல் இதம் சேர்க்கிறது. பிரிவின் வலியைச் சொல்லும் பாடலின் வரிகள் கவனம் பெறுகின்றன. குறிப்பாக, "ஆறாத காயங்கள் கரம் பூட்டுதே... போகாத தூரங்கள் எனை ஈர்க்குதே" போன்ற வரிகளுடன் ஷானின் மென்சோக வாய்ஸும் இணையும் இடங்கள் ஈர்க்கின்றன.

# சுந்தர்.சி படத்திற்கு வந்த புதுசிக்கல் அதிர்ச்சியில் ரசிகர்கள்

**சென்னை : டிச. 24,**

**சுந்தர்.சி இயக்கத்தில் உருவாகியுள்ள 'அரண்மனை 4' திரைப்படம் புதுசிக்கலை சந்தித்துள்ளது. இந்த விஷயம் 'அரண்மனை' சீரிஸ் ரசிகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.**



பொங்கல், தீபாவளி உள்ளிட்ட பண்டிகை விடுமுறை என்றாலே கொண்டாட்டத்திற்கு படங்களும் ரிலீஸ் ஆவது வழக்கம். அந்த வகையில், அடுத்த வருடம் பொங்கல் பண்டிகை விடுமுறையை ஒட்டி 'லால் சலாம்', 'கேப்டன் மில்லர்', 'அயலான்' எனப் பல படங்கள் வரிசைக் கட்டி நிற்கிறது. இந்த வரிசையில் இயக்குநர் சுந்தர்.சியின் 'அரண்மனை 4' படமும் இருக்கிறது. கடந்த 2014ம் ஆண்டு சுந்தர்.சி இயக்கி, நடித்தப் படம் 'அரண்மனை'. இது ரசிகர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றதை அடுத்து, அதன் இரண்டாம், மூன்றாம் பாகங்களும் வெளியானது.

இரண்டாம், மூன்றாம் பாகங்கள் கொடுத்த வெற்றி உற்சாகத்தை அடுத்து, இதன் நான்காம் பாகத்தையும் இயக்கி இருக்கிறார் சுந்தர்.சி. இது அவருடைய 25வது படம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த திரைப்படத்தில் நடிகை தமன்னா மற்றும் ராசி கண்ணா உள்ளிட்ட பலர் நடித்திருக்கின்றனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 'அரண்மனை 4' திரைப்படம் வருகின்ற 2024ம் ஆண்டு பொங்கல் பண்டிகை விடுமுறைக்கும் வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. கடந்த மூன்று பாகங்களும் பிற படங்களின் போட்டி இல்லாமல் வெளியாகி வெற்றிப் பெற்று இருந்தது. ஆனால், இந்த முறை தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் வெளியாகவுள்ள 'அரண்மனை 4' திரைப்படத்திற்கு மிகப்பெரிய போட்டி நிலவுகிறது.

இந்த விஷயம் படத்தின் வசூலை பாதிக்குமோ என தயங்குகிறது படக்குழு. இதனால், பொங்கல் ரேஸில் இருந்து 'அரண்மனை 4' விலக அதிக வாய்ப்புள்ளதாகவும் தெரிகிறது. இதுகுறித்தான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் எதிர்பார்க்கலாம்.

வரலாறு உலகம்

# பிரான்ஸில் விமானம் அவசர தரையிறக்கம்

## பயணிகளில் இந்தியர்கள் அதிகம்



**பாரிஸ் : டிச. 24,**

**303 இந்தியர்களுடன் சென்ற விமானம் பிரான்ஸ் நாட்டில் தரையிறக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. தொழில்நுட்ப கோளாறா அல்லது கும்பலால் பயணிகள் சித்ரவதை செய்யப்பட்டார்களா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.**

துபாய் விமான நிலையத்தில் இருந்து 303 இந்தியர்களை ஏற்றிக்கொண்டு மத்திய அமெரிக்கநாடானநிகரகுவா நாட்டிற்கு ருமேனியாவின் பிரபலமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் சென்று கொண்டிருந்தது. இந்த விமானம் பிரான்ஸ் எல்லைப்பகுதியில் பறந்தபோது திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, விமானம் தரையிறக்க அந்நாட்டிடம் அனுமதி கோரப்பட்டது. இதையடுத்து, விமானம் இறங்க அனுமதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கிழக்கு பிரான்ஸில் உள்ள வாட்ரி விமான நிலையத்தில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இதனிடையே, தாங்கள் மனித கடத்தல் கும்பலால் அவதிக்குள்ளாகியுள்ளோம் என விமானத்தில் பயணித்த பயணிகள் அதிகாரிகளுக்கு ரகசியமாக தகவல் கொடுத்துள்ளனர். இதையடுத்து, விமானத்தை மீண்டும் பறக்கவிடாமல் பிரான்ஸ் அதிகாரிகள் தடுத்ததால் பரபரப்பு தொற்றிக்கொண்டது. இதையடுத்து, இரண்டு பேரை கைது செய்த அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த தகவலை இந்திய தூதரகத்திற்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இந்திய தூதரக அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். இந்தியபயணிகள் மனித கடத்தல் கும்பலால் பாதிக்கப்பட்டவர்களா? என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இவர்கள் மத்திய அமெரிக்காவுக்கு பயணம் செய்து அதன்பின் சட்டவிரோதமாக அமெரிக்கா அல்லது கனடாவுக்கு செல்ல முயற்சி மேற்கொள்ள நினைத்திருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்தியர்கள் அனைவரும் இரவு முழுவதும் விமான நிலையத்திலேயே தங்கியுள்ளனர். அவர்கள் செல்வதற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. பிரான்ஸ் நாட்டை பொறுத்தவரை அந்த நாட்டிற்கு வெளிநாட்டினர் வந்தால், அவர்கள் பயணம் மேற்கொள்ள இருக்கும் நாட்டிற்கு செல்ல விடாமல் 4 நாட்களுக்கு தடுத்து நிறுத்தி வைக்க முடியும் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

# அமெரிக்காவில் இந்து கோயிலில் காலிஸ்தான் ஆதரவு வாசகம்



**கலிபோர்னியா : டிச. 24,**

**அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இந்து கோயில் ஒன்றில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் சுவரில் எழுதிவைத்த வாசகத்தால் சர்ச்சை எழுந்துள்ளது.**

கலிபோர்னியாவின் நேவார்க் நகரில் சுவாமிநாராயண் கோயில் உள்ளது. அதில் பிரதமர் மோடி, இந்தியாவுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரங்கள் இடம்பெற்றுள்ளன. அமெரிக்காவில் இதுபோல் இந்து கோயிலில் வெறுப்புப் பிரச்சாரம் இடம்பெறுவது இது முதன்முறை அல்ல. அண்மையில் கனடாவில் இதுபோல் இந்து கோயிலில் இதுபோல் காலிஸ்தான் ஆதரவு வாசகங்கள் எழுதப்பட்டன.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனிமாநிலம் வேண்டும் என காலிஸ்தான் பயங்கரவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இதனை வலியுறுத்தி அமெரிக்கா, கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். கனடாவில் உள்ள இந்திய தூதரகம் முன்பு, கடந்த மார்ச் மாதம் அவர்கள் போராட்டம் நடத்தினர். காலிஸ்தான் பயங்கரவாதிகளின் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கனடா அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப்பிரிவின் தலைவரும், தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் போட்டோக்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினர்.

காலிஸ்தான் தனி நாடு கோரும் சீக்கியர்களுக்கான நீதி எனும் அமைப்பின் தலைவரான குர்பத்வந்த் சிங் பன்னுன். அமெரிக்கா மற்றும் கனடாவின் குடியுரிமையைப் பெற்றுள்ளார். இவர் இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். இந்திய நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்த உள்ளதாகவும் தற்போது அவர் அறிவித்துள்ளார். இந்தியாவால் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்டுள்ள அவரை, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் வைத்து கொலை செய்வதற்கான சதியில் நிகில் குப்தா என்ற இந்தியர் ஈடுபட்டதாக அமெரிக்கநீதித்துறை குற்றம் சாட்டியுள்ளது. இந்திய அதிகாரியின் உத்தரவுக்கு இணங்க நிகில் குப்தா இந்த செயலில் ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இவ்வாறாக கனடா, அமெரிக்காவில் காலிஸ்தான் சர்ச்சை வலுத்துவரும் சூழலில் இந்து கோயிலில் காலிஸ்தான் எதிர்ப்பு வாசகம் எழுதப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் அவசர உதவி கோரி அழைப்பு விடுத்த பெண்ணையே சுட்டுக்கொன்ற போலீஸார்



**லாஸ் ஏஞ்சல் : டிச. 24,**

**அமெரிக்காவில் காவல்துறைக்கு அவசர அழைப்பு விடுத்த கறுப்பினப் பெண், விசாரணைக்குச் சென்ற போலீஸாரால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். கறுப்பினத்தோர் மீது காவல்துறையினர் பாரபட்சம் காட்டுவதாக நீடிக்கும் புகார்களின் மத்தியில், அண்மை சம்பவமாக இது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.**

லாஸ்ஏஞ்சல்ஸில்வசிக்கும் நியானி ஃபின்லேசன் என்ற 27 வயது பெண், இரவு நேரத்தில் அமெரிக்காவின் அவசரகால உதவிக்கான 911 என்ற எண்ணை அழைத்தார். ஆண் ஒருவரால் அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருப்பதாக, தனது வீட்டிலிருந்து நியானி அவசர அழைப்பு விடுத்தார். கவுண்டி ஷெரிப் அலுவலகத்திலிருந்து உடனடியாக லான்காஸ்டரின் அடுக்குமாடி குடியிருப்புக்கு போலீஸார் விரைந்தனர்.

அங்கேகுடியிருப்புவளாகம் ஏற்கனவே களேபரமாக இருந்தது. குறிப்பிட்ட வீட்டுக்குள் சண்டைச் சச்சரவும், அலறலுமாக இருப்பதை அக்கம்பக்கத்தார் சுட்டிக்காட்டினர். அது நியானியின் வீடு என்பதை உறுதி செய்த போலீஸார், வீட்டுக் கதவை திறக்குமாறு கோரினார். ஆனால் உள்ளிருந்து கதவு திறக்கப்படாததோடு, அலறல் சத்தம் அதிகமாகவே, கதவை உடைத்துபோலீஸார் உள்ளே நுழைந்தனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி போலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவுக்குச் சென்றது.

கைவசம் எட்டங்குல சமையல் கத்தியோடு ஆண் ஒருவர் மீது பாய முயன்ற பெண்ணை அக்கணமே போலீஸார் சுட்டு வீழ்த்தினர். இதில் அந்தப் பெண் நியானி பரிதாபமாக உயிரிழந்தார். சம்பவ இடத்தில் உடனிருந்த நியானியின்9வயதுமகள்மற்றும் நியானியின் ஆண் நண்பர் ஆகியோரிடம் போலீஸார் விசாரணை நடத்தினர். இதில் நியானி மற்றும் அவரது ஆண் நண்பர் இடையிலான குடும்பச் சண்டனை காரணமாக நியானி 911 அவசர அழைப்பு விடுத்ததாகவும், ஆனால் போலீஸார் சம்பவ இடத்துக்குள் நுழைந்தபோது கையில் கத்தியுடன் இருந்த நியானியை அவசரத்தில் சுட்டுக்கொன்றதும் தெரிய வந்தது.

அமெரிக்காவில் கறுப்பினத்தோரிடம் காவல்துறையினர் பாரபட்சம் காட்டுவதாக குற்றச்சாட்டுகள் வலுத்துவருகின்றன. அவற்றை உறுதி செய்வது போன்று மூன்றாண்டுகளுக்கு முந்தைய ஜார்ஜ் பிளாய்டு கொலைச் சம்பவம் முதல் பல்வேறு அக்கிரமங்கள் அமெரிக்காவில் அரங்கேறி வருகின்றன. இனவெறி அடிப்படையிலான அலட்சியம்காரணமாகநேரிடும் இந்த குற்ற சம்பவங்களில் அமெரிக்க போலீஸார் கைது செய்யப்படுவதும் நடந்து வருகிறது.

# மீண்டும் அணு ஆயுத சோதனை : சீனாவின் ரகசியத்தை கண்டுபிடித்த செயற்கைக்கோள் புகைப்படங்கள்



**லோப்நூர் : டிச. 24,**

**அணு ஆயுத சோதனைகளை, சீனா நடத்தத் திட்டமிட்டிருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.**

நம் அண்டை நாடுகளில் ஒன்றான சீனா, அவ்வபோது அமெரிக்காவையே அச்சுறுத்தி வருகிறது. இருநாடுகளிடையே பனிப்போர் நிலவிவரும் நிலையில், சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் அமெரிக்காவும், அந்நாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டில் சீனாவும் பல விஷயங்களில் முரண்டுபிடித்து வருகின்றன. தவிர, நம் நாட்டுடன் அருணாச்சலபிரதேசத்துக்கும் உரிமைகொண்டாடிவருகிறது சீனா.

இப்படியான சூழ்நிலையில், சீனா மீண்டும் அணுஆயுத சோதனைகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கான இடத்தை சீனா ரகசியமாக உருவாக்கி வருவதாகவும் பகீர் தகவல் வெளியாகி உள்ளது. அணு ஆயுதங்கள் ஆபத்தானவை என்பதாலேயே அதுகுறித்த அச்சம், உலக நாடுகளில் அதிகரித்து வருகிறது. அணு ஆயுத தாக்குதலை எந்தவொரு நாடு ஆரம்பித்தாலும் அதுபூமியின் அழிவாக இருக்கலாம் என்றும் வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த நிலையில், அணு ஆயுத சோதனைகளை, சீனா நடத்தத் திட்டமிட்டிருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.இதுகுறித்ததகவலை அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

அதில், சீனாவின் சின்ஜியாங்கில் இருந்து தக்லமாகன் மற்றும் கும்டாக் பாலைவனத்துக்கு இடையே இந்த லோப்நூர் பகுதியில் அணுஆயுத சோதனை நடத்த வசதியாக 60 அடி ஆழத்தில் பல இடங்களில் துளைகள் போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்விடத்தில்தான் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு சீனா தனது முதல் அணுகுண்டை சோதனையை நடத்தியது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து அப்பகுதியில் அணுஆயுத சோதனைகளை நடத்துவதற்கு சீனா தயாராகிவருவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதாவது லோப்நூர் பகுதியில் எடுக்கப்பட்ட சேட்டிலைட் போட்டோக்கள் இதனை உறுதி செய்துள்ளன.

அதன்படி லோப்நூர் பகுதியில் பல்வேறு கட்டுமானங்களும், ஆழமான துளைகள் இருப்பதும் உறுதியாகி உள்ளது. இதுமட்டுமின்றி புதிய சாலைகளும் அமைக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. அந்தப் பகுதியில் ஒரு புதிய விமானத் தளம் கட்டப்படுவதையும் செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன. இதுதொடர்பாக பல ஆண்டுகளாக அமெரிக்க கண்காணித்து வந்த நிலையில், தற்போது அதை உறுதிசெய்துள்ளது. மேலும் அங்குள்ள கட்டமைப்புகள் அடிப்படையில் பார்த்தால் சீனா அணுஆயுதங்களில் நவீனமயமாக்கும் முயற்சியில் இறங்க வாய்ப்புள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை, அமெரிக்க பெண்டகனின் நேஷனல் ஜியோஸ்பேஷியல் - இன்டெலிஜென்ஸ் ஏஜென்சியின் முன்னாள் ஆய்வாளரான ரென்னி பாபியார்ஸ் கண்டுபிடித்துள்ளார். இதுகுறித்து வல்லுநர்கள், "சேட்டிலைட் புகைப்படங்களின் ஆதாரங்கள் என்பது சீனா மீண்டும் அணுஆயுத சோதனைகளை நடத்துவதற்கு தயாராகி வருவதை உறுதி செய்கிறது. இது உலக நாடுகள் இடையே அணுஆயுதங்கள் சார்ந்த போட்டியை அதிகப்படுத்த வாய்ப்புள்ளது" எனத் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் பகுதியில் எடுக்கப்பட்டுள்ள இப்புகைப்படங்கள் இணையதளங்களில் வைரலாவதுடன், உலக நாடுகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. எனினும், இதுகுறித்து சீனா எந்தச் செய்தியையும் வெளியிடவில்லை. அந்நாடு இந்த விஷயத்தில் அமைதி காப்பதால் உலக நாடுகளிடையே அச்சம் அதிகரித்துள்ளது.

# இந்த விஷயத்தில் இந்தியர்கள் தான் டாப் வெளியானது புள்ளி விவரம்




**வாசிங்டன் : டிச. 24,**

**வெளிநாடுகளில் பணியாற்றி தாயகத்துக்கு பணம் அனுப்புவதில் இந்தியர்கள் தான் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளனர் என்று உலக வங்கி அறிவித்துள்ளது.**

இந்தியாவில் வாழும் மக்கள் பலரும், தனது பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக சிங்கப்பூர், மலேசியா, துபாய் போன்ற வெளிநாடுகளில் வேலை செய்து வருகின்றனர். அங்கு பணிபுரிந்து ஈட்டிய தொகையை குடும்பத்தினருக்கு அனுப்பி வருகின்றனர். அப்படி வெளிநாடுகளில் பணியாற்றி தாயகத்துக்கு பணம் அனுப்புவதில் இந்தியர்கள் தான் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளனர் என்று உலக வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக உலக வங்கி புள்ளிவிவர அறிக்கை வெளியிட்டுள்ளது. 'வெளிநாடு வாழ் இந்தியர்கள் தாயகத்துக்கு பணம் அனுப்புவது கடந்த 2014ம் ஆண்டில் 24.4 சதவீதமாக இருந்தது. அப்போது, இது வரலாற்று உச்சமாக பார்க்கப்பட்டது. நடப்பாண்டில் இந்த வளர்ச்சி 12.4 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், வெளிநாடு வாழ் இந்தியர்கள் 2023 ம் ஆண்டில் இந்தியாவுக்கு அனுப்பும் தொகை 1,400 கோடி டாலர் அதிகரித்து 12,500 கோடி டாலராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டில் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் பணியாற்றி தனது சொந்த நாடுகளுக்கு அனுப்பும் மொத்த பணத் தொகையில், இந்தியர்கள் அனுப்பும் பணத்தின் பங்கு 66 சதவீதமாக அதிகரிக்கவிருக்கிறது.

அதன்படி, இந்தியர்கள் கிட்டத்தட்ட 10.38 லட்சம் கோடி ரூபாயை தனது தாயகத்துக்கு அனுப்பியுள்ளனர். முந்தைய ஆண்டான 2022ம் ஆண்டில் இது 63 சதவீதமாக இருந்தது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக மெக்சிகோ 2வது இடத்தை பிடித்துள்ளது. அந்த வகையில், வெளிநாடு வாழ் மெக்சிகோ நாட்டவர்கள் தனது சொந்த நாட்டுக்கு அனுப்பும் தொகை இந்த ஆண்டில் 6,700 கோடி டாலராக இருக்கும்.

மெக்சிகோவை தொடர்ந்து, மூன்றாவது இடத்தை சீனா (5,000 கோடி டாலர்), நான்காவது இடத்தை பிலிப்பைன்ஸ் (4,000 கோடி டாலர்), ஐந்தாவது இடத்தை எகிப்து (2,400 கோடி டாலர்) ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் வெளிநாட்டில் பணியாற்றி தங்களது சொந்த நாடுகளுக்கு அனுப்பியுள்ளனர்' என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# 'அதிபர் பதவிக்கு டிரம்ப் தகுதியற்றவர்'

## தீர்ப்பளித்த நீதிபதிகளுக்கு கொலைமிரட்டல்




**அமெரிக்கா : டிச. 24,**

**அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட டொனால்டு டிரம்ப்க்கு தகுதி இல்லை என கூறி, அவருக்கு தடைவிதித்த அந்நாட்டு நீதிபதிகளுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் (77). இவர் கடந்த 2017 முதல் 2021 வரை குடியரசு கட்சி சார்பில் அதிபர் பதவியில் இருந்தார். கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் போட்டியிட்ட டொனால்டு டிரம்ப், தற்போதைய அதிபர் ஜோ பைடனிடம் தோல்வியைத் தழுவினார்.

இதனால் டிரம்ப் ஆதரவாளர்கள் கடந்த 2021 ஜனவரி 6-ம் தேதி அன்று வாஷிங்டனில் உள்ள நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து போராட்டம் நடத்தினர். அப்போது ஏற்பட்ட வன்முறையில் 5 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் 2024-ம் ஆண்டு நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் டிரம்ப் மீண்டும் போட்டியிட காய்களை நகர்த்தி வருகிறார்.

இந்நிலையில் 2021 ஜனவரி 6-ல் நடந்த நாடாளுமன்ற வன்முறை வழக்கை விசாரித்த கொலராடோ நீதிமன்றம், அதிபர் தேர்தலில் போட்டியிட டிரம்ப் தகுதியற்றவர் என்றும், அவரது பெயரைத் தேர்தல் வாக்குச்சீட்டில் குடியரசு கட்சி சேர்க்க கூடாது என்றும் சமீபத்தில் உத்தரவிட்டது.

இந்நிலையில், அதிபர் பதவிக்கு டிரம்ப் போட்டியிட முடியாதவாறு தடைவிதித்து உத்தரவிட்ட கொலராடோ நீதிமன்ற நீதிபதிகளுக்கு கொலைமிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கொலராடோ நீதிமன்றத்தில் பணியாற்றும் உயர் அலுவலர் லிசா மொனாகோ கூறுகையில், "விசாரணை அமைப்புகள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், தேர்தல் அலுவலர்கள் ஆகியோருக்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அச்சுறுத்தல்கள் வருகின்றன. எப்பிஐ அதிகாரிகள், நீதிபதி, அதிபர் பதவிக்கான 3 வேட்பாளர்கள் ஆகியோருக்கு கொலை மிரட்டல் விடுத்த வழக்குளை எப்பிஐ விசாரித்து வருகிறது" என்றார்.

# இழப்பீடு தந்து "எஸ்கேப்" ஆகும் இணையதள நிறுவனம்



**அமெரிக்கா : டிச. 24,**

**வயது முதிர்ந்தவர்கள் காணும் வீடியோக்களை பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்ய இணையதளங்கள் நடத்தும் நிறுவனங்கள் பல அமெரிக்காவில் உள்ளன. அவற்றில் "அய்லோ ஹோல்டிங்க்ஸ்" எனும் நிறுவனமும் ஒன்று.**

அய்லோ, தங்களின் "போர்ன் ஹப்" எனும் இணையதளத்தில் இத்தகைய உள்ளடக்கம் கொண்ட வீடியோக்களை பதிவேற்றம் செய்ய விரும்பும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் அமைத்து அவர்களிடம் பணம் பெற்று, அந்த வீடியோக்களை தங்கள் இணையதளத்தில் வெளியிட்டு விளம்பர வருவாய் ஈட்டி வருகிறது.

அத்தகைய நிறுவனங்களில் ஒன்றான "கேர்ள்ஸ் டு போர்ன்" எனும் வீடியோ பதிவேற்றம் செய்யும் நிறுவனத்துடன் அய்லோ ஹோல்டிங்க்ஸ் ஒப்பந்தம் செய்து கொண்டது. அவர்கள் பதிவேற்றம் செய்த வீடியோக்களை பயனர்கள் காணும் விதமாக தங்களின் போர்ன் ஹப் வலைதளத்தில் பரப்பி வந்தது. ஆனால், "கேர்ள்ஸ் டு போர்ன்" நிறுவனம், பெண்களை சட்டவிரோதமாக கடத்தி, மிரட்டி, அவர்கள் விருப்பத்திற்கு மாறாக தகாத வீடியோக்களை எடுத்து போர்ன் ஹப் உட்பட பல இணையதளங்களில் பதிவேற்றம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்நிறுவனத்தின் சட்டவிரோத செயல் குறித்து சில பெண்கள் புகார் அளித்ததால், வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்நாட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வந்தது. விசாரணையில் சம்மதமில்லாமல் எடுக்கப்பட்ட வீடியோ படங்கள் என தெரிந்தும், 2017லிருந்து 2020 வரை கேர்ள்ஸ் டு போர்ன் நிறுவனத்திடமிருந்து சுமார் ரூ. 83 லட்சம் ($1,00,000) வரை பணம் பெற்று போர்ன் ஹப் வீடியோக்களை பரப்பியதும், அதன் மூலம் விளம்பர வருவாயாக சுமார் ரூ. 6 கோடிகள் ($7,64,000) வரை ஈட்டி வந்ததும் தெரிய வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பல பெண்கள் போர்ன் ஹப் நிறுவனத்திற்கு புகார் அனுப்பியிருந்தும் அவற்றை அந்நிறுவனம் உதாசீனப்படுத்தியது. இவ்வழக்கு விசாரணையில் ப்ரூக்ளின் நீதிமன்றம், அமெரிக்க அரசாங்கத்திற்கு போர்ன் ஹப், சுமார் ரூ. 15 கோடி ($1.8 மில்லியன்) வரை அபராதம் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இதற்கு சம்மதித்துள்ள போர்ன் ஹப், பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் தனித்தனியே இழப்பீடு வழங்கவும், இது போன்ற சம்பவங்கள் இனியும் நடைபெறாமல் இருக்கவும், புகார்களை உடனுக்குடன் கவனித்து தீர்வளிக்க கண்காணிப்பாளர் ஒருவரை தங்கள் வலைதளம் சார்பாக நியமிக்கவும் ஒப்பு கொண்டுள்ளது.

ஆனால் பாதிப்புக்கு உள்ளான பெண்கள் எத்தனை பேர் என்பதும் அவர்களுக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக வழங்கப்பட்டது என்பது குறித்தும் தகவல்கள் இல்லை. ஆனால், பெண்களுக்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத இழப்பிற்கு காரணமான ஒரு நிறுவனத்திற்கு இது போதுமான தண்டனையே அல்ல என சமூக வலைதளங்களில் பயனர்கள் கருத்து கருத்து தெரிவிக்கின்றனர்.

## வதந்திகளைப் பரப்பிய 34,000 இணையக் கணக்குகள் முடக்கம்

# சீன அரசு அதிரடி நடவடிக்கை

**சீனா : டிச. 24,**

**வதந்திகளைப் பரப்பிய குற்றத்தின் கீழ் 34,000 இணையக் கணக்குகளை முடக்கியுள்ள சீன அரசு, 6,300 பேருக்குத் தண்டனையையும் வழங்கியுள்ளது.**

சீனாவில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து சமூக ஒழுங்கை நிலை நாட்டும் முயற்சியில் அந்நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர். அதனடிப்படையில் இதுவரை வதந்திகளைப் பரப்பிய குற்றத்தின் கீழ் 34,000 இணையக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. மேலும் 6,300-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதுவரை 4,800 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சீன பொது பாதுகாப்பு அமைச்சக அதிகாரி லி டாங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்," இணையத்தில் தவறான தகவல்களைப் பரப்பி சமூக ஒழுங்கை, அமைதியைக் கெடுக்க முயற்சிக்கும் இணைய கணக்குகளை முடக்கியுள்ளோம். இந்த நடவடிக்கைகள் நல்ல பலனை அளிக்கும்" என்று தெரிவித்துள்ளார். கடந்த 2023-ம் ஆண்டு இணையவழியாக நடக்கும் வன்முறைகள், குற்றங்கள், இழிவுபடுத்துதல், தனிப்பட்ட விபரங்களைத் திருடுதல் போன்றவற்றுக்கு எதிராக சீன காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுவரை 110 வழக்குகளை காவல்துறை பதிவுசெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்தில் உள்ள மழலையர் பள்ளியில் கிறிஸ்துமஸ் தாத்தாவாக வந்த யானைகளுக்கு குழந்தைகள் உற்சாக வரவேற்பு



**பாங்காக் : டிச. 24,**

**தாய்லாந்தில் உள்ள பள்ளி ஒன்றில் நடந்த கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட்டத்தில் கிறிஸ்துமஸ் தாத்தா வேடத்தில் வந்த யானைகள் குழந்தைகளை உற்சாகப்படுத்தின.**

தாய்லாந்து நாட்டில் உள்ள அயோத்தியா பகுதியில் அமைந்துள்ள தனியார் மழலையர் பள்ளியில் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட்டம் நடைபெற்றது. 2000க்கும் மேற்பட்ட குழந்தைகள் இதில் விதவிதமாக ஆடை அணிந்து கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் 5 யானைகள் கிறிஸ்துமஸ் தாத்தா வேடத்தில் அழைத்து வரப்பட்டன. அந்த யானைகளை குழந்தைகள் வரவேற்றனர். பொம்மை, பலூன் என குழந்தைகளுக்கு யானைகள் மூலம் பரிசுகள் வழங்கப்பட்டன. குழந்தைகள் மட்டுமின்றி அவர்களின் பெற்றோர்களும் இதில் கலந்து கொண்டு உற்சாகம் அடைந்தனர்.

# தென் மாவட்டங்களில் கல்லூரிச் சான்றிதழ்களை இழந்தவர்கள் கட்டணமின்றி நகல்களைப் பெறலாம்





# திமுகவில் பரபரப்பு : பொன்முடியுடன் மு.க.அழகிரி திடீர் சந்திப்பு

# தமிழர்கள் செலுத்திய ஒரு ரூபாய் வரிக்கு பிரதமர் இரண்டு ரூபாய் திருப்பி கொடுத்துள்ளார்




| சென்னை / புதுக்கோட்டை | 24.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

நாராயண் தேசாய் , காந்தியவாதி, நூலாசிரியர் (பி.1924) (இ.2015)



மதன் லால் மேத்தா , இந்திய இயற்பியலாளர் (பி.1932) (இ.2006)



இல. செ. கந்தசாமி , தமிழறிஞர், இதழாளர் (பி.1939) (இ.1992)



தமிழ்மகன் , எழுத்தாளர் (பி.1964)



## இன்றைய நினைவு நாள்

ஈ. வெ. ராமசாமி , திராவிடர் கழகத்தினை தோற்றுவித்தவர் (பி.1879) (இ.1973)



எம். ஜி. இராமச்சந்திரன் , தமிழக நடிகர், தமிழ்நாட்டின் 5வது முதலமைச்சர் (பி.1917) (இ.1987)



பி. பானுமதி , தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1925) (இ.2005)

